www.padippakam.com

# வெகுஜனம்






ஜனம்-3 மே-யூன்-1990 குரல்-1

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



»CHANCHIVE«
Postbox: 1205
7500 Holstebro . Danmark

# மக்களை நேசித்ததால்; மறுக்கப்பட்ட சுதந்திரத்தில் மரணித்த தோழர்கள்

ஏகாதிபத்தியத்தின் ஏவலின் பெயரில் வடக்கு கிழக்கில் முற்போக்கு சக்திகளை அழிக்கும் சேவகத்தை தொடர்ந்து மேற்கொண்டு வரும் புலிகள், தமிழ் பேசும் மக்கள் மத்தியில் முற்போக்கு சக்திகளின் தலைமைத் துவத்தை அழிப்பதன் மூலம் முற்போக்கு சக்திகளையே வேரோடு அழிக்கும் நோக்கிடன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் க. பத்மநாபா, மத்திய குழு உறுப்பினர் தோழர் பெ. கிருபாகரன், முன்னணி உறுப்பினர் வை. யோகசங்கரி (பா.உ) உட்பட பதின்மூன்று பேரை படுகொலை செய்துள்ளனர். இந்த சகாப்தத்தின் உழைக்கும் மக்களின் உண்மை ஊழியர்களை, உன்னத தலைவர்களை தமிழ் பேசும் மக்கள் பலிகொடுத்து பரிதவிக்கின்றனர். இக்கொடூர மிராண்டித்தனத்துக்கு எதிராக போராட அனைத்து முற்போக்கு சக்திகளும் அணிதிரளுமாறு அறை கூவல் விடுக்கின்றோம்.

**மரணம் வாழ்வின் முடிவல்ல----**

> "நாம் மக்கள் இல்லாத மண்ணை நேசிக்கவில்லை. மக்களுக்காகவே மண்ணை நேசிக்கிறோம்."
>
> தோழர் க. பத்மநாபா

படிப்பகம்

www.padippakam.com

# எமது எண்ணங்கள்

அமைதி வருகிறது! அமைதி வருகிறது! இந்திய வல்லாதிக்கப்படையை விரட்டியடித்த வீரர்கள் வந்துவிட்டார்கள் அமைதி வருகிறது என வீதி வீதியாக கூவிக்கொண்டு திரிந்தவர்கள் தமது கருத்தினை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக்கொண்டு ஓடி ஒளிந்துகொண்டார்கள். யாரையும் காணோம் ஏன்? வீரர்களுக்காக வக்காலத்து வாங்கியவர்களே வீரர்களின் வரிச் சுமையால் அழுத்தப்படுவதாய் அங்காங்கு முணு முணுப்புக்கள் கேட்கின்றன. அமைதியைக் குழப்புபவர்களிடமிருந்து அமைதியை எதிர்பார்த்தது யார் குற்றம்?

அடிக்கடி கமீத் யாழ் சென்று திரும்புகிறார். மாகாண சபை கலைப்பு தேர்தல் என்னும் நிகழ்வுகளுக்கான நடவடிக்கைகளை அரசு திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறது. வடக்கு கிழக்கில் அதிகாரத்தை எல். ரீ. ரீ. ஈ யினரிடம் கொடுத்து விட்டு இச் சந்தர்ப்பத்தை பயன் படுத்தி கிழக்கை தம்வசப்படுத்தும் திட்டமிட்ட நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. கிழக்கில் ஏழை விவசாயிகளின் நிலங்களில் சிங்களக் குடியேற்றங்கள் பலாத்காரமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. அமைதிப்படையினர் வருவதற்கு முன்னர் இருந்த இலங்கை இராணுவ முகாம்கள் யாவும் மீண்டும் திறக்கப்படுகின்றன. வடக்கு-கிழக்கு இணைப்பில் தாம் வெற்றி பெற்றும் கிழக்கை சிங்கள மயப்படுத்தவும் எடுக்கப்படும் இந் நடவடிக்கைகளுக்கு எதிராக வடக்கு-கிழக்கில் சர்வவல்லமை படைத்தவர்கள் என்று கூறுபவர்களிடமிருந்து எந்தவித எதிர்ப்பு நடவடிக்கைகளையும் காணேனோம். அப்படியாயின் கிழக்கை அரசுக்கு விட்டுக்கொடுத்துவிட்டு வடக்கை சிற்றரசாக பெற்றுக்கொண்டு திறை சேகரித்து ஆயுத ஆட்சி நடத்த இரகசியத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா?. அப்படியாயின் இதுவரை தியாகம் செய்த இளைஞர்கள் மற்றும் இழப்புக்கள் யாவும் வடக்கு தமிழீழத்திற்கா?

மாகாண அரசின் தோற்றுவிக்கு காட்டப்படும் அவசரங்களில் மாகாண அரசுக்கான அதிகாரங்களை பெறுவதில் கொஞ்சமேனும் அக்கறைப் படுவதாய் காணோம்.

கைக்கு வக்கு வதில் பொலிசாரை, இராணுவத்தினரை முகாம்களுக்கு அடைக்கவைப்பதில் ஆயுதங்களைத் தரமாட்டோம் என்ற உரக்கச் சொல்லமா


படிப்பகம்

விற்கும் இருக்கும் நட்டில் இலங்கை அரசிடமிருந்து மாகாண அரசின் அதிகாரங்களை கேட்டும் பெற்றுக்கொள்ள தயங்குவதேன்? முன்பிருந்த மாகாண அரசின் அதிகாரங்களைப்பற்றி வற்புறுத்தியதால் தான் இலங்கை அரசினால் திட்டமிட்டு செயலிழக்க செய்யப்பட்டார்கள். மீண்டும் அதிகாரங்களை வற்புறுத்தினால் தமக்கும் அதேகதிதான் என்று பேசாமல் இருக்கிறார்களா? அல்லது அதிகாரம் ஒன்றும் வேண்டாம் எங்களுக்கு ஆயுத ஆட்சி நடாத்த. எங்கள் உரிமைகளை பாதுகாக்க (மக்கள் உரிமைகளை அல்ல) மாகாண அரசு என்ற பெயர்ப்பலகை கிடைத்தால்போதும் என்று பேசாமல் இருக்கிறார்களா? எது எப்படி இருப்பினும், இன்றைய இடைக்கால தீர்வான மாகாண அரசு அதிகாரங்கள் அடங்கியதாக இருக்கவேண்டும். அதிகாரமற்ற மாகாண அரசு அர்த்தமற்றதே.

இந்திய அமைதிப்படை வெளியேறியதிலிருந்து இன்றுவரை 600க்கு மேற்பட்டோர் வடக்கு கிழக்கில் புலிகளால் சத்தமின்றி படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இச்சம்பவங்களை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்த புறப்படவிருந்த மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு சாம் தம்பிமுத்து புலிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். புலிகளின் போற்றத்தகுந்த அமைதி நடவடிக்கைகள் இவை. நேற்றுவரை படுகொலைகள், அராஜகங்கள், ஜனநாயக மறுப்புகள் என்று வாய்கிழிய கத்திய, எழுதிய முற்போக்கு சக்திகள் என்று தம்மை கூறிக்கொள்பவர்கள் எல்லாம் இன்று இப்படுகொலைகளுக்கு எதிராக குரல் கொடுக்காது மௌனிகளாகிவிட்டதேன்? இவர்களின் இலங்கை நிருபர்கள் எங்கே ஓடிவிட்டார்கள்?

வடகிழக்கில்

மீன் பிடிக்கும் தொழிலாளர்களின் மடியில் கைவைக்கும் நடவடிக்கையாக பருவகால மீன் பிடிக்கென தெற்கிலிருந்து மீன்பிடித் தொழிலாளர்கள் வடக்குகிழக்கில் குடியேறத் தொடங்கியுள்ளனர். இதற்காக புலிகள் மூச்சுவிடக்காணோம். மீன்களை ஏற்றிச்செல்லும் லொறிகளுக்கு வரி, ஐஸ் கட்டிக்கு வரி, மீன் பெட்டிக்கு வரி என்ற புலிகளின் நடவடிக்கையால் திருகோணமலையிலிருந்து கொழும்புக்கு மீன் லொறிகள் செல்லமறுத்துள்ளன. இதனால் மீன்பிடித் தொழிலாளர்களும்; இதை அண்டி வாழும் கூலித் தொழிலாளர்களும் நெருக்கடிக்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர். விவசாயிகளிடமிருந்து மிளகாய்க்கு வரி, வெங்காயத்துக்கு வரி என்று புலிகளால் வாங்கப்படுவதால் கூலி விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கையாலும், இப்பிரச்சனையைத் தீர்க்காது அதில் குளிர்காயும் நடவடிக்கையால் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளால் தொழிலாளர்கள் சொல்லொணா பொருளாதாரக் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். இதை அரசு தனது வர்க்கக் கூட்டாளிகளின் கூட்டான சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைப்படி செய்து வருகி

www.padippakam.com

றது. மலையகத்தில் உப வேண்டுச் செய்கை என்னும் சாட்டுச் சொல்லி சிங்கள மக்களைக் குடியேற்றி மலையக மக்களை வெளியேற்றி மலையகத்தை திட்டமிட்டு சிங்கள மயமாக்கும் நடவடிக்கையை பேரினவாத அரசு மேற்கொள்கிறது. இவ்வரசின் மந்திரி சபையில் மலையக தொழிலாளர்களின் பிரதிநிதிகள் என மார்தட்டும் மலையக ராஜாக்கள் அங்கும் வருந்தும் வாய்மூடி மௌனியாகி வேடிக்கை பார்க்கின்றனர். இந்நிலையில் தொழிலாளர்களின் உரிமைத் தினமான மேதினத்தை தொழிலாளர்களை ஒடுக்கும் உறிஞ்சும் உரிமைகளை மறுக்கும் வருக்கிகளும், தொண்டமான் கூட்டமும், பிரேமதாசாவின் தாசர்களும் வேடிக்கை, கேளிக்கை விழாக்களாக கொண்டாடுவது உலகில் சிறந்த நகைச்சுவையாகும். அன்றும் தொழிலாளர்களுக்காகவே தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவரும் முற்போக்கு சிந்தனை சிற்பி தொழிலாளர் தலைவர் ஜயிகை அமரரின் கனவை நிகழ்ச்சி சிறந்ததொரு சிறப்பம்சமாகும். நாட்டை சீரழித்தவரும் இந்நாசகார சக்திகளிடமிருந்து நமது தேசத்தை காப்பாற்ற அனைத்து நேர்மையான முற்போக்கு சக்திகளும் ஒன்றிணைவோம்.

உழைக்கும் மக்கள் கொண்டாடும்
உரிமை மேதினத்தை
உறிஞ்சும் கூட்டம்—இன்று
உல்லாச விழாவாக்குகிறது
உதிக் குருதிக் கரம் கொண்ட
உன்னத பாட்டாளிகளின்
உள்ளக் குமுறல்கள்—ஒருநாள்
உருகும் எரிமலையாய் வெடித்து
உதிரம் கொட்டும்—அதில்
உறிஞ்சுவோர்களின் கூட்டமெல்லாம்
உருக்குலைந்து போகும்—அவரை
உறக்கச் சொல்வோம் நாம்
"உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்"



படிப்பகம்

www.padippakam.com

# பத்திரிகையும் சுதந்திரமும் - சின்னவன்

எழுத்து எவ்வளவு வலிமை வாய்ந்தது என்பதற்கு அமெரிக்காவில் ஒரு பத்திரிகை வாட்டர் கேற் ஊழலை அம்பலப்படுத்தி ஜனாதிபதி நிக்சனை பதவி இழக்கச் செய்தது என்பதே நல்ல உதாரணம்.

அதே போல் போபர்ஸ் ஊழலை வெளி உலகிற்கு கொண்டு வந்து ராஜீவ் காந்தியை பதவி இழக்கச் செய்ததில் இந்தியப் பத்திரிகைகள் பல முக்கிய பங்கு வகித்துள்ளது எனலாம். ஆனால் பத்திரிகைச் சுதந்திரம் மறுக்கப்படுவதோடல்லாமல் பத்திரிகையாளர்கள் வன்முறைக்குள்ளாவதும் உடல் ரீதியாகப் பாதிக்கப்படுவதும் ஏன் கொலை செய்யப்படுவதும்கூட நடந்துள்ளது. சில பத்திரிகைக் காரியாலயங்கள் அழிக்கப்பட்டுமுள்ளன.

உலகளாவிய ரீதியில் பத்திரிகையாளர்கள்மீது உடலளவிலான தாக்குதல் 1989ம் ஆண்டே மிகவும் கூடுதலான இடம் பெற்றுள்ளன. 1989ம் ஆண்டு கடமையில் ஈடுபட்டிருந்தபோது 22நாடுகளைச் சேர்ந்த 63 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1988ம் ஆண்டு 46பேர் கொல்லப்பட்டனர். கொலம்பியாவில் மட்டும் கடந்த 10வருடத்தில் 86 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1989ம் ஆண்டில் போதைவஸ்துக் கடத்தல் காரர்களுக்கும் அரசுக்கும் செல்வந்த தொடர்பு ஸ்தாபனங்களுக்குமிடையில் ஏற்பட்ட யுத்தத்தில் மட்டும் 19 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

1989ல் ஈரானில் ஐந்துபேர் சிரச்சேதம் செய்யப்பட்டனர். பேரு நாட்டில் 7பேர் கொல்லப்பட்டனர் எல்சல்வடோரில் 11பேர் கொல்லப்பட்டுள்ளனர். பிரேசிலில் 4பேர், இந்தோனிசியாவில் 3பேர், இலங்கையில் 5பேர், மற்றும் இதர வேறுசில நாடுகளில் 26பேர் என மொத்தம் 63 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட பத்திரிகையாளர்கள் அரைவாசிக்கு மேற்பட்டோர் இலத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே கொல்லப்பட்டுள்ளனர். அங்கும் போதைவஸ்துக் கடத்தல் காறர்களினால் கொல்லப்பட்டோரே அதிகம்.

லெபனானில் 1985 மார்ச் 16 முதல் அசோசியட் பிரசின் பிரதம மத்திய கிழக்கு நிருபர் மிருகத்தனமான முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கடந்த அண்மைக்காலங்களில் 31 பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டுள்ளனர், அல்லது காணாமல் போய்விட்டனர். இவர்கள் சொந்த நாட்டு பத்திரிகையாளரும்

www.padippakam.com

வெளிநாட்டு பத்திரிகையாளருமாவர். 107 பேர் உடல் ரீதியாகத் தாக்கப்பட்டனர், 324 பேர் கைதாகினர், 23 அரசாங்கங்கள் 38 பிரசுர நிலையங்களை 89ல் மூடியுள்ளதோடு தடைசெய்துள்ளன. 1988ல் பத்திரிகையாளர் கொலை, தாக்குதல், பத்திரிகைகளை தடைசெய்தல் மூடுதல் போன்ற பத்திரிகைச் சுதந்திர தடைச்சம்பவங்கள் 465 நிகழ்ந்துள்ளன. 1989ல் இது போன்ற சம்பவங்கள் 1045 ஆகும். 1989ல் மேற் கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி 159 நாடுகளில் 56 நாடுகளில் எழுத்து, செய்தித் தொடர்பு சுதந்திரமாகவும் 74 நாடுகளில் அரைவாசி வீதம் சுதந்திரமாகவும் 29 நாடுகளில் சுதந்திரமற்ற தன்மையும் காணப்படுகின்றன.

பத்திரிகைச் சுதந்திரம்

நைஜீரியாவிலும் தரிநரயிலும் கட்டுப்படுத்தப்பட்டன. இராணுவ சதி ஒன்றின் பின் சூடானில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. பனாமாவில் புதிய தொடர்பு சாதனச் சட்டமானது அரசுக்கு அளவுமீறிய அதிகாரங்களை வழங்குவதாக கண்டிக்கப்பட்டது. இலங்கையில் அவசர காலச் சட்டத்தின் கீழ் பத்திரிகைத் தணிக்கை செய்யப்படுவதும், சுதந்திரமான கருத்து மறுக்கப்படுவதும் தொடர்ந்து வந்துள்ளது. அண்மையில் அதி உத்தம ஜனாதிபதி கூட தனது விசனத்தை தெரிவித்துள்ளார். ஈழநாடு பத்திரிகை ஒருமுறை விமானக் குண்டு தாக்குதலுக்குள்ளானது. பீரங்கிக் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. வடகிழக்கில் வரும் பத்திரிகைகள் பல முறை தடைசெய்யப்பட்டன. இன்றும் வடக்குக்கிழக்கில் பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. முரசொலி பத்திரிகை ஆசிரியர் பத்திரிகை நடாத்த முடியாத நெருக்கடியில் நாட்டை விட்டு வெளியேறினார். சீனாவில் மாணவர் ஜனநாயக போராட்டத்தின்போது சகல எதிர்ப் பிரசுரங்களும் ஒடுக்கப்பட்டன. தென்னாபிரிக்காவில் அவசர காலச் சட்டங்களின் மூலம் பத்திரிகையாளரை தடுப்புக் காவலில் வைப்பதை அதிகரித்தது. 1989ல் 105 பத்திரிகையாளர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். அரசுக்கு விரோதமாக எழுதினர் எனக் குற்றம் சாட்டி 6 பத்திரிகை ஆசிரியர்கள் மிக மோசமான சித்திர வதைக்குள்ளாக்கப்பட்டனர். இந்தியாவிலும் அவ்வப்போது பத்திரிகை சுதந்திரம் சோதனைக்குள்ளாவதுண்டு."

வடக்கு கிழக்கில் கருத்து சுதந்திரம் பேணப்படுகிறது என போலிப் அறிக்கைகள் விடப்படுகின்றன. ஆனால் இவர்களின் கூட்டத்தினர் வெளிநாடுகளில் எழுத்து சுதந்திர மறுப்புகளை அராஜக நடவடிக்கைகள் மூலம் அடக்க முற்பட்டு பத்திரிகை சுதந்திரத்தின் குரல்வளையை நெரிக்கும் முயற்சிகள் ஆங்காங்கு நடைபெறுகின்றன. பிரான்சிலிருந்து வெளிவரும் "பள்ளம்" பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவரான கலைச்செல்வன் அண்மையில் புலிகளால் தாக்கப்பட்டுள்ளதோடு இனிமேல் தமக்கெதிராக எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார். இக் காட்டுமிராண்டித்தனத்தை வன்மையாக "வெகுஜனம்" கண்டிக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com



# குறிஞ்சிக் குறைகள்

பழ - கருப்பையா

மலையக மக்களின் எந்தவித ஆலோசனையோ அபிப்பிராயமோ இன்றி 1964ல் தான்தோன்றித் தனமாக செய்து கொள்ளப்பட்ட சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் இன்று பாஸ்போட் பெற்றுக் கொண்டவர்கள் என்று காரணம்காட்டி ஒருலட்சத்து அறுபதாயிரம் மலையக மக்கள் இந்தியாவுக்கு அனுப்பப்படவுள்ளனர். இவர்களை நிர்ப்பந்தமாக அனுப்புவதன் மூலம் அவ்விடங்களில் பெரும்பான்மை மக்களை குடியேற்றி மலையகத்தை சிங்கள மயமாக்கும் திட்டமிட்ட நடவடிக்கையானது மனித உரிமைகளை மீறும் தரங்கெட்ட நடவடிக்கையாகும்.

சிறிலங்கா அரசு இரட்டைப் பிரஜா உரிமை முறையை நடைமுறைப்படுத்துகிறது. இம்முறை மூலம் வெளிநாட்டில் பிரஜா உரிமை பெற்ற ஒருவர் சிறிலங்காவிலும் தனது பிரஜா உரிமையை தொடர்ந்து தங்களைத்தக்கொள்ளலாம். அப்படியாயின் இந்திய கடவுச்சீட்டைப் பெற்ற இந்த மக்கள் ஏன்(?) இலங்கையில் வாழமுடியாது.

போலித் தொழிற் சங்கங்களுக்குள் உழைக்கும் மக்களைப் பூட்டி வைத்து உலகை இருட்டாகக் காட்டிக்கொண்டு அரசுடன் இணைந்து கரகாட்டம் ஆடிவரும் அனைவருக்கும் மலையக மக்கள் பதில் கூறும் நன்னாள் வெகு தூரத்தில் இல்லை.

**மலையகம் எங்கள் பூமி!**
**நாம் இங்கேயே வாழ்வோம்!!**



படிப்பகம்

www.padippakam.com

# என் தேசத்தவர்களே

வேற்படை

தமிழால் இணைபவர்களே
என் தேசத்தவர்களே!
உங்களின் வதைகளை
சித்திரவதைகளை
நித்திரையற்ற நீள் இரவுகளை
ரத்த முத்திரை பதித்த
முடுதிரைகளை
மறுக்கப்பட்ட சுதந்திரத்தில்
நெரிக்கப்பட்ட குரல்வளைகளை
ஒடுக்கப்பட்ட ஜனநாயகத்தை
உணரா மறுக்கும் உங்களின்
தலைகளை
குட்டிக் குட்டியே
குனியவைத்தோரை
பட்டியல் போட்டால்
பல நாள் நீளும்
பழிகளை யென்று
பகலும் மனிதரும்————————
ஊறுகாலியோடு
கீறிய உடல்களாய
உருக்கெரியாக மாற்றிய
போராளிகளை
அரைகுறையாய் சிதைந்த
போர்க் குழியில்
கலைந்த கற்றைகளை
அருகுதல் போன்று
தெருக்களில் குவித்த
உயிருடன்
அடிக்கச் அடிக்க
எரிபொருள் ஊற்றி
மலர் வளையங்கள் என
டயர்களை சாத்தி
கொள்ளி வைத்தோர்க்கு
அள்ளிக் குளிர்பானங்கள்
கொடுத்துக் குளிர்வைத்தோரை
வைகாசி மார்கழி 86
வரலாற்றில் மறக்குமா ————————?


படிப்பகம்

www.padippakam.com

# யார் தியாகி

சிறுகதை

அக்கினி

லக்ஷ்மியையும் என்னையும் ஐயாவையும் சுமந்துகொண்டு சிலன் 6307 இலக்கம் கொண்ட ஏவோட்டி கார் லக்ஷ்மியின் சிறைச்சாலைக்குள் நுழைந்தது. நான்தான் அந்தக் காரின் றைவர். எனக்கு தெரிந்த இந்த மூன்று வருடத்தில் லக்ஷ்மி இந்தச் சிறைச்சாலைக்கு வரும் பன்னிரண்டாவது கைதி. அநேகமானவர்கள் தற்கொலை செய்துகொண்டனர் தப்பி ஓடியவர்களுமுண்டு. லக்ஷ்மி எந்த ரகமோ என எண்ணியவாறு காரை விட்டு கீழே இறங்கினேன். ஐயா இறங்கிக்கொண்டார். பின் கதவை திறந்துவிட்டேன். பரட்டைத் தலையுடனும் கிழிந்த சட்டையுடனும் லக்ஷ்மி கூனிக்குறுகி இறங்கினாள். அப்பும்போது நல்ல உடுப்பு போட்டுவிடக்கூட முடியவில்லை இவளைப் பெற்றவர்களால் என மனதுக்குள் திட்டிக்கொண்டேன். இவளைப் பெற்றோர் கொழும்பில் உள்ள குடாநாட்டு பிரபு ஒருவருக்கு மாதம் 30ரூபா சம்பளத்திற்கு விற்றதாகவும் அவரிடமிருந்து ஐயா ஆயிரம் ரூபா கொடுத்து அடிமையாக வாங்கிவிட்டதாகவும் பின்பு அறிந்தபோது லக்ஷ்மியை திட்டியதுகூட எனக்கு வேதனையாக இருந்தது.

அவள் மட்டுந்தான் அடிமையில்லை நானுங்கூடத்தான் அடிமை. நான் ஐயா என்று கூறும் எட்வேட்டின் மைத்துனன்தான் நான். ஆனால் பணத்தின் புள்ளிவிபரத்தில் ஏற்பட்ட இறக்கத்தால் நான் எட்வேட் வீட்டு கார் றைவர் ஆனேன். ஒரு உழைப்பாளிக்கான அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்ட அதனால் சுருக்கச்சொன்னால் அடிமை எனக்கும் லக்ஷ்மிக்கும் உள்ள வித்தியாசம் அவள் தோட்டக்காட்டு அடிமை நான் குடாநாட்டு அடிமை அவ்வளவுதான். பண புள்ளி விபரத்தைப் பார்த்தால் இரண்டுபேருக்கும் கிட்டத்தட்ட ஒன்றுதான்.

கடந்த காலங்களில் மலையகப் பிள்ளைகளுக்கு எட்வேட் வீட்டில் நடந்தவற்றை நினைத்துப் பார்க்கும்போது லக்ஷ்மியை நினைக்க கவலையாக இருந்தது.

ஒரு வாரமாக நான் நினைத்ததுபோல எதுவும் நடக்கவில்லை. ஒரு நாள் காலையில் வீட்டிலிருந்து வேலைக்கு புறப்பட்டு வந்து எட்வேட் வீட்டுக்குள் வந்தேன். வீட்டுக்கு முன்புறம் மதிலுக்கு உட்புறம் டானாப்பட செவ்வரத்தை பூக்கன்று மிக நெருக்கமாக வைத்திருந்தார்கள். முழுவதும் பூத்திருக்கும்போது பார்க்க அழகாக இருக்கும். இப்பூக்கன்றுக்கு பின்னால் மெலிய அழுகைச் சத்தம் கேட்டது. எனக்கு விளங்கிவிட்டது லக்ஷ்மிக்கு

www.padippakam.com

திருவிழா தொடங்கிவிட்டதென்று.

எனது குரலைக் கேட்டவுடன் அனாதைக்கு ஆதரவு கிடைத்ததுபோல் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள்.

அண்ணாச்சி காலையிலை களைப்பாயிருந்ததிச்சு சற்று தூங்கிட்டேன். பெரியம்மா வந்து தடைப்பங்கட்டையாலை மாறிட்டா இதோ பாருங்கோ கால் விரல் ஒடிஞ்சு போச்சு.

என்றவாறு காலைக்காட்டினாள் காலில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. நான் லக்ஷ்மியின் தலையைத் தடவிவிட்டு அழாதே வளரமுன் மாறிவிடும் என்று சொல்லிவிட்டு சென்று காரைக் கழுவ ஆயுத்தமானேன். லக்ஷ்மி அழுகையை நிறுத்திக் கொண்டவளாய் பூங்கன்றுகளுக்கடியில் கூட்டிக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் எட்வேட்டின் குரல் கேட்டது:

எங்கே அந்தச் சனியன். எடியேய் எங்கபோய் தொலைஞ்சாய்.

ஐயா பெரியம்மா பூங்கன்றுகளை பெருக்கச் சொன்னாங்க அதுதான் பெருக்கிறேனுங்க.

எண்டி. காலையிலை எனக்கு குளிக்க சுடுதண்ணீர் வைக்கவேணும் தொட்டியிலை தண்ணீர் நிரப்பவேணுமெண்டு தெரியாதோ.

பெரியம்மா இதை சொன்னாங்கையா

எதிர்த்தா பேசுறாய் நாயே என்று எட்வேட் லக்ஷ்மியின் தலையை பிடித்து தள்ளிவிட்டான். பக்கத்திலிருந்த கமுகில் லக்ஷ்மியின் தலையடிபட்டது. அவள் ஐயோ அம்மா என்றலறியது எனக்கு குடலை நடுங்கச் செய்தது. ஏறச் சொன்னால் எருதுக்கு கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம் என்டமாதிரி பெரியம்மா பூங்கன்றடியை கூட்டச் சொல்லுறா எட்வேட் தண்ணீர் கட்டவைக்கச் சொல்லுறார் 10வயசுப் பிள்ளை எதைச் செய்யிறது. பாவம் அழுதழுது கொண்டு காலை நொண்டிக்கொண்டு தலையைப் பிடித்துக் கொண்டு மெதுவாகப்போய் பம்பியில் தண்ணீர் இழுக்கத் தொடங்கியது. எனக்கு இந்த வேலையை விட்டு ஓடலாமா என்று தோன்றியது.

எட்வேட் குளித்து சாப்பிட்டுவிட்டு தொழிற்சாலைக்கு போகத் தயாரானார். பழங்கள் அடைக்கும் தொழிற் சாலை ஒன்று சொந்தமாக எட்வேட் நடத்துகிறார். நான் டிறைவர் சீட்டில் தயாராக இருந்தேன். லக்ஷ்மி இன்னும் சிணுங்கியவாறு மாட்டுக் கொட்டிலில் சாணி அள்ளிக்கொண்டிருந்தாள்.. பெரியம்மா குசினிக்குள்ளிருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தா.

திடீரென்று எட்வேட் வீட்டுக்கு முன்னால் பதினைந்து ஆமி ட்றக்குகள் வந்து நின்றன. நூறுக்கு மேற்பட்ட ஆமிக்காரர்கள் குதித்து வீட்டுக்குள் ஓடிவந்தார்கள். எட்வேட்டைப்பிடித்து


படிப்பகம்

கொண்டார்கள். என் காரைச்சுற்றி மூன்றுபேர் பெரியம்மாவை சா
ப்பிட்ட கையுடன் வெளியே கொண்டுவந்தார்கள். வீடு முழுவதும் சல்ல
டைபோட்டு தேடினார்கள் எதுவுமே கிடைக்கவில்லை. திடீரென ஒரு
ஆமிக்காரன் சிங்களத்தில் ஏதோ கத்தினான். எனக்கு எதுவும் விளங்க
வில்லை ஏதோ ஒரு போட்டோவைக் காட்டினார்கள். இயக்கத்தை
சேர்ந்த ஒருவருடன் இந்தியாவில் வைத்து எடுத்த படம். அவ்வளவுதா
ன் சரமாரியாக அடிகள் விழுந்தன. எட்வேட் ஐயோ அம்மா என்று
கத்தினார். வாயிலிருந்து மண்டையிலிருந்து கையிலிருந்து இரத்தம் வழிந்
தது. காலில் செருப்புமில்லாமல் வெள்ளை சேட் வேட்டியில்லாமல்
மண்ணில் கால்வைக்காத எட்வேட்டை வெறும் ஜட்டியுடன் இரத்தம்
வழிய வழிய கதறக் கதற ஏற்றிக்கொண்டு போனார்கள்.

பெரிய
ம்மா கத்திக்கொண்டுபோனா என்ரை மகனை விடுங்கோ அவன் என்
ன செய்தவன். என்ரை ஐயோ உன்ரை மகன் பயங்கரவாதி இயக்கத்தி
லை இருக்கிறான் அதுதான் கொண்டுபோறம்.

இரண்டு மூன்று நாட்கள்
நகர்ந்தன. பத்திரிகைகளில் தலையங்கத்தில் எட்வேட். வாரங்கள் ஓடிய
து உறவினர்கள் வந்து போனார்கள் எட்வேட் பலாலியிலிருந்து அ
னையிறவு கொழும்பு என்று மாற்றி இப்போது பூசாவில் இருக்கிறார்.
யாரும் பார்க்க முடியாது. பெரியம்மா வழமைக்கு திரும்பிவிட்டா.
வேறு வேலை இல்லாததால் லக்ஷ்மியை சித்திரவதை செய்வதும்
நேரம் கிடைக்கும்போது சேர்ச்சில் போய் கொம்சாரிக்கிறதுமாக
பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தா. நான் அசரி வீட்டுக்கு வந்து
தொட்டாட்டு வேலைகளை செய்துவிட்டு போய் வந்துகொண்டிருந்தே
ன்.

ஒருநாள் பெரியம்மா சேர்ச்சுக்கு போயிருந்தா நான் வீட்டுக்கு
ப்போயிருந்தபோது லக்ஷ்மி ஓடிவந்து எனது காலைக் கட்டிக்கொண்
டு அண்ணாச்சி என்னை வேறெங்காவது கொண்டுபோய் விட்டிடுங்க.
பாருங்க. காலையிலை வீடு கூட்டும்போது ஒரு கிளாஸ் விழுந்து உடை
ஞ்சு போச்சு பெரியம்மா இழுத்துக்கொண்டுபோய் கத்தியாலை
தலையை மொட்டை அடிச்சா இரத்தம் வழிஞ்சிது நான் கதறக்
கதற கொதிநீரை ஊற்றிட்டாங்க. அண்ணாச்சி, வலிக்குதுங்க என்னா
லை இங்க இருக்க முடியாது. இங்கை இருந்தா ஒருநாள் இல்லாட்டி
ஒரு நாள் என்னைச் சாகடிச்சுடுவாங்க என்னைக் காப்பாத்துங்க.

என்று அழுதா
ள். எனக்கு என்னையறியாமலே நீர் சொட்டியது லக்ஷ்மியின் தலை
முழுவதும் கொப்பளங்களாக இருந்தது.

இதோ பாரும்மா என்னாலை
ஒன்றும் செய்யமுடியாது. சந்தர்ப்பம் கிடைச்சால் உதவி செய்யிறன்.
அதுவரைக்கும் பொறுத்துக்கோ என்று ஆறுதல் சொல்லிவிட்டுப் போ

www.padippakam.com

னேன்.

மாதங்கள் உருண்டன. திடீரென எட்வேட் வீட்டில் மரண ஓலம். பெரியம்மாவுக்கு என்னவோ என்று ஓடிப்போனேன்.

பூசாவில் சித்திரவதையில் அடிச்ச இடத்தில் எட்வேட் செத்துப்போனார். போராட்டத்திலிருந்து உயிர் நீத்த தியாகி என்று சொல்லி பெருந்திரளான சனம் வந்திருந்தது. அவரின் பெயரில் பெரிய பெரிய போஸ்டர்கள் எல்லாம் அடித்து ஒட்டியிருந்தார்கள். இவர் வீரத்தியாகியா இல்லையா என்பது இவர் பிடிபட்டு போனபின்பு விளங்கியதாலும் மலையகப் பிள்ளைகளை இவர் பண்ணின கொடுமைகளாலும் இவருக்காக ஒருசொட்டு கண்ணீர்விட மனம் வரவில்லை.

இவர் தனது தொழிற்சாலைக்கு இயந்திரம் இறக்க அனுமதி கேட்டபோது அரசாங்கம் மறுத்துவிட்டது. இவர் இந்தியாவில் நின்ற சமயம் அரசால் தேடப்பட்ட இயக்கத்தை சேர்ந்த ஒருவருடன் பழக்கமேற்பட்டு கட்டு மரமூலம் இயந்திரங்களை களவாக இறக்கி யாழ்ப்பாணத்தில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணத்தால் சரிக்கட்டி தொழிற்சாலையை ஆரம்பித்தார். அடிக்கடி இந்தியா போய்வந்த இவர் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவருடன் படம் பிடித்துக்கொண்டார். அனால் இயக்கத்தை சேர்ந்தவர் அரசால் தேடப்படுபவர் என்பது எட்வேட்டுக்கு எதுவும் தெரியாது. உண்மைப்போராளி இந்தியாவிலிருக்கும் போராட்டத்தைப்பற்றியோ தமிழ் மக்களின் உரிமைகளைப்பற்றியோ எதுவுமே தெரியாத எட்வேட் ஒரு போட்டோவால் தியாகியாகிவிட்டார். இவருக்கா வீரவணக்கம் அஞ்சலி, கண்ணீர். நான் மனதுக்குள் காறித் துப்பிக் கொண்டேன்.

இது நடந்த ஒரு வாரத்தில் எட்வேட்வீட்டுக்கு அடுத்துள்ள அருளம்பலத்தின் மகன் பாபு இயக்கத்தில் சேர்ந்து ஆறு மாதங்களின் பின் வீட்டுக்கு வந்திருந்தான்.

இதை மோப்பம் பிடித்த இராணுவம் அவனைப் பிடிக்க அருளம்பலம் வீட்டுக்கு விரைந்தது. விஷயமறிந்த பாபு தப்பி ஓடினான். பொழுதுபடும் நேரம் குச்சொழுங்கை ஒன்றால் ஓடி வேலி ஒன்றால் பாய்ந்து எட்வேட் வீட்டுக்குள் புகுந்தான். பெரியம்மா சேர்ச்சுக்குப் போயிருந்தா. லக்ஷ்மி மட்டும் வீட்டில் இருந்தாள்.

பாபு லக்ஷ்மியிடம் விசயத்தை சொன்னான். லக்ஷ்மி கடைக்கு போகும்போதும் வரும்போதும் பாபுவைப் பார்த்திருக்கிறாள். இவன் பிடிபட்டால் எட்வேட்டுக்கு நடந்ததுதான் நடக்குமென்பதை நினைத்தபோது எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று எண்ணினாள். எதுவும் தோன்றவில்லை. இழுத்துக்கொண்டுபோய் சுற்றி அடைத்திருந்த ஆடு மாடு கொ

www.padippakam.com

விட்டிருக்கும் பெரிய கொட்டிலுக்குள் விட்டு கோழிக்கூட்டால் மூடிவிட்டான். ஒழுங்கைக்குள் இராணுவத்தினர் சுத்திக்கொண்டு ஓடித்திரிந்தனர். முன்பக்கம் றோட்டு பின்பக்கம் குச்சொழுங்கை. அதன் படலையை திறக்கும்படி சுக்குரலிட்டனர். லக்ஷ்மி வேறுவழியில்லாமல் திறந்துவிட்டாள். மம்மல் பொழுது மாடுகளும் அதுகளும் ஆட்காரனைக் கண்டதுடன் மிரண்டு கத்தின. அவர்கள் மேலோட்டமாக வீடு முழுவதும் தேடிவிட்டு லக்ஷ்மியிடம் கேட்டுவிட்டு போய்விட்டார்கள். பாபு நன்றியுணர்வுடன் லக்ஷ்மியைப் பார்த்துவிட்டு முன்பக்க கேற்றால் வெளியேறினான். பாபு எட்வேட் வீட்டில் ஒளிந்திருந்தான் லக்ஷ்மிதான் காப்பாற்றினாள் என்ற செய்தி ஊரெல்லாம் பரவியது சேர்ச்சிலிருந்து திரும்பிய பெரியம்மா காதிலும் விழுந்தது.

வீட்டிற்கு வந்த பெரியம்மா லக்ஷ்மியை கழுத்தில் கட்டிவைத்து பார்க்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் சுட்டிருக்கிறா. லக்ஷ்மி ஓவென்று அழுதிருக்கிறாள். அக்கம் பக்கத்தவர் யாரும் உதவிக்கு வரவில்லை. காரணம் அவர்களுக்கு பழகிப்போய்விட்டது.

காலையில் நான் வேலைக்குப் போனேன். பெரியம்மா முழுசிக்க ஓடிவந்தா.

இஞ்ச பார் தம்பி இந்த நாய் அருணாயலடிக்கிற பொடியனை ஒளிச்சு வைச்சிருந்திருக்குது. அதுக்கு கழுத்திலை கட்டிவைச்சு கம்பியாலை சுடுபோட்டுள்ளன். ரோசக்காரி மாசிரி மாமரத்திலை தொங்கிவிட்டாள். வா ஒருக்கா கிடங்கு வெட்டித் தாழ்ப்பம்.

லக்ஷ்மி
தொங்கிக்கொண்டிருந்த என்னைப்பார்த்து அழுவது போலிருந்தது. இதற்குப்பிறகும் இங்கே வேலை செய்ய மனம் இடம் கொடுக்க இல்லை. கார்த் திறப்பை கிழவியின் முகத்தில் வீசி எறிந்துவிட்டு தெருவில் இறங்கி நடந்தேன்.

என் மனக்கண் முன்னால் தியாகி லக்ஷ்மி வந்து நின்று அழுதுகொண்டிருந்தாள். தெருச் சுவரில் தியாகி எட்வேட் போஸ்டரில் சிரித்துக்கொண்டிருந்தார். இதில் யார் தியாகி (?) என்ற வேதனையான சிரிப்புடன் பயணத்தை தொடர்ந்தேன்.






படிப்பகம்

www.padippakam.com

# சங்கரப்பிள்ளையின் சந்தி அரசியல் - ஆறு



சங்கரப்பிள்ளையரின் முற்றத்தில் சைக்கிளை நிற்பாட்டிப் போட்டு பிள்ளையர் பிள்ளையர் என்டு கூப்பிட்டுக்கொண்டு வீட்டுக்குள் புகுந்தார்.

குரல் கேட்ட லட்சுமி அக்கா வாத்தியார் உங்கிலை குந்துங்கோ என்றவாறு பிள்ளையரை எழுப்பப் போனா.

என்ன நேரம் எட்டுமணி ஆச்சு இன்னும் பிள்ளையர் எழும்பயில்லை யோ என்ன விசேசம் ஏதும் சுகமில்லையோ என்டு யோசிச்சபடி வாத்தியார் திண்ணையில உட்கார்ந்தார்.

என்ன வாத்தியார் வெங்காயம் விற்றுப் போட்டியளோ கிழமைக் கணக்கா ஆளைக்காணயில்லை என்றவாறு

கொட்டாவி விட்டுக்கொண்டு வந்தார் பிள்ளையர்.

வெங்காயம் விக்கிறபாடு பெரும்பாடு அது பிறகு சொல்லுறன். நீர் என்ன இப்பதான் எழும்பி வாறீர் ஏதும் சுகமில்லையோ

உடம்புக்கு சுகம்தான் கெதியிலை பிள்ளை சுகமில்லாமல் வரும்போல கிடக்கு. ஊர் போற போக்கு கனநாளைக்கு தாங்காது போல கிடக்கு.

அஞ்சரி அண்ணை போனால் திண்ணை காலியாகும் என்டு நினைச்சியளே இப்ப திண்ணையிலை வெண்ணை கிடந்து வழுக்குது கடைசியில திண்ணையுமில்லை அண்ணையுமில்லை உபத்திரவம் தாற வெண்ணைதான் மிச்சம் அதைவிடும். இராத்திரி எங்க போனனீர்.

கனநாளாய் படம் ஒண்டும் பாக்கயில்லை இராஜநாயகி தியேட்டரிலை சரஸ்வதி சபதம் படம் ஓடுது எண்டாப்போல பார்க்கப்போனன் அங்க போனாப்போலதான் கனக்க விசயம் விளங்கிச்சுது.

என்ன விளங்கிச்சுது பிள்ளையர்

எத்தினை வருசமாய் இரவிலை சயிக்கிளிலை ஆசுவாசமாயபோய் காத்து வாங்கினதில்லை என்

www.padippakam.com

டுபோட்டு முதல் சோவுக்கு போனன். டிக்கற் என்ன ரூபா எண்டு போட்டுக்கிடந்தது. அந்த ரூபா கொடுத்தன். டிக்கற்றும் ஒரு ரூபாயும் திரும்பி வந்தது. என்ன தம்பி நீர் படிச்ச பள்ளிக்கூடத்திலை 5ரூபாவிலை 3ரூபாய் போனால் மிச்சம் ஒரு ரூபாபோ தம்பி எண்டு நக்கலாய் கேட்டன்.

ஒரு ரூபாய் அதுக்கு பேசாமல் போயிட்டன்.

எதுக்கு தம்பி

அதுதான் இயக்கவரி பேசாமல் போறீரோ அவங்களைக் கூப்பிடவோ.

வேண்டாம் தம்பி நான் போறன். எண்டு சியோட்டருக்குள்ளை நுழைஞ்சு படத்தை பார்த்தன். இன்ரேவல் வந்தது. ஒரு கச்சான் சுருள் வாங்கலாம் எண்டு போனன்.

கச்சான் என்ன விலை தம்பி

இரண்டு ரூபா

ஒரு சுருளை வாங்கிக்கொண்டு காசைக் கொடுத்தன்.

இன்னும் 50 சதம் தாரும்.

அதுக்கோ எண்டு வாயைப் பிளந்துகொண்டு 50 சதம் கொடுத்தன். படம் முடிஞ்சு சயிக்கிளை எடுத்துக்கொண்டு வெளியிலை வந்தன் வாசலிலை ஒருத்தர் நிண்டார்.

அப்பு ஒரு ரூபாய் தந்திட்டு சயிக்கிளை கொண்டு போங்கோ

தம்பி சயிக்கிள் வாடகை கொடுத்திட்டன் எண்டு சொன்னனான் ஞாபகம் வந்தனான் ------ மறந்துபோச்சு அதுக்கோ இந்தாங்கோ கோ இந்தாங்கோ எண்டு மனம் எரிஞ்சுகொண்டு பல்லை இளிச்சுக் கொண்டு காசைக் கொடுத்தன். சிக்கும் பீடாக் கடை கூரியேக்கை சாடையாய் தண்ணிவிடாய்க்கிற மாதிரி கிடந்தது பக்கத்திலை பேக்கரியோட கிடக்கிற தேத்தண்ணிக் கடையிலை தேத்தண்ணி ஒண்டு குடிப்பம் எண்டு நினைச்சன். தேத்தண்ணிக்கு காசு பிறகு அதுக்கும் காசுகொடுக்கவேணும் அதைவிட கொஞ்சம் பச்சத் தண்ணி குடிப்பம் எண்டு இறங்கினன்.

தம்பி கொஞ்சம் பச்சத்தண்ணி தாங்கோ எண்டு வாங்கிக் குடிச்சிட்டு டம்ளரைத் திருப்பிக் கொடுத்தன்.

அப்பு 50 சதம் தாங்கோ

தம்பி தண்ணிக்கும் காசோ தம்பி தண்ணிக்கும் காசோ

இல்லை அப்பு இது அதுக்கு

திடுக்கிட்டுப்போன நான் சத்தியமாய் வாந்தியாய்டா அழுதப்போயிட்டன். என்ரை வாழ்க்கையிலை தண்ணிக்கு வரிகொடுக்கும் இந்த மண்ணில் நான் இன்னும் உயிரோடு இருக்கிறனே என நினைக்க வெக்கமாயிருக்கு. என்ரை கடையிலை இருந்த எல்லாளை கொடுத்த இதுகளை வளர்த்திருப்பன். இப்ப இதுகள் குடிக்கிற தண்ணிக்குகூட வரிகேட்குதுகள். இதுகளுக்கு நரேந்திர நவசிவாயம் தான் சரி. என் பிள்ளையள் அந்தாளி என்ன செய்தது.

www.padippakam.com

என்ன செய்யிறது. என்னாலை செய்யேலாதுதான் ஆனால் நமசி உண்மையிலை ஒரு மரமண்டைதான் வாத்தியார்.
விசயத்தை சொல்லுமன்.
அந்தாளின்ரை இரண்டாயிரம் கண்டு மிளகாய்க்கன்று நட்டிருந்தது. நல்லாய் மதாளிச்சு வளர்ந்தது பூத்துக்காய்ச்சுது. இரவு பகல் எண்டு பாராமல் உண்மையிலை அந்தாள் நல்லாய்க் கஸ்டப்பட்டது. எல்லைக்கும் மருந்துக்கு செலவழிச்ச காசே மிளகாய் வித்தெடுக்கலாமோ தெரியாது

அந்தாளுக்கு செலவழிச்சது மனசில. முந்தநாள் ஊரிலிருந்துள்ள நமசி நிக்கேக்குள்ளை இவை யோசிச்சினமாம். யோம் கால் முழுவதையும் யாரிட்டையும் எத்தனை கண்டு எண்டு கேட்டினமாம். சரி கண்டுக்கு ஒரு ரூபாய் வீதம் இரண்டாயிரம் ரூபா தாரும் எண்டு சொல்லிச்சினமாம்.
தம்பியவை நான் இந்த மிளகாய்க் கண்டு வைக்க நல்லா நட்டப்பட்டுப்போனன். இதிலை வித்துவாற காசு அதுக்கு சரிக்கட்டலாமோ தெரியேல்லை என்னாலை உவ்வளவு காசு தரேலாது.
விசாரிக்கிறதையொண்டும் வேண்டாம் யோராயிட்டும் எண்டால் எல்லாரும் எல்லாம் தரத்தான் வேணும். நாளைக்கு வாறம் காசை வைச்சிரும் எண்டு சொல்லிப்போட்டு போயிட்டினம்.
அந்தாள் என்ன செய்தது தெரியுமோ வாத்தியார்
என்னத்தைச் செய்யிறது காசைமாறிக் கொண்டுவந்து வட்டியைக் கட்ட வேண்டியதுதான்.
இல்லை வாத்தியார் நமசி ஒரு போக்கு நான் கஸ்டப்பட்ட பயிருக்கு உழைச்ச உழைப்புக்கு இவைக்கு நான் ஏன் வரி கொடுக்க வேணும் இவைகள் தண்ணி இறைச்சவையோ உரம் போட்டவையோ பாத்தி கட்டினவையோ என்று நினைச்சு நமசி செய்த வேலையைப் பார்த்து வந்த பொடியள் திகைச்சுப்போச்சினம்.
நமசி என்ன செய்தது பிள்ளையர்.
எல்லா மிளகாய்க் கண்டுகளையும் பிடுங்கி கட்டுகளாய் கட்டி வைச்சிருந்தது. இவை வந்தினம். இந்தாங்கோ மிளகாய்க் கண்டு கள்காசகிக்குடியுங்கோ என்னட்டை காசு இல்லை இருந்தாலும் தரமாட்டன் எண்டு மனி அள்ளிக் கொட்டித் திட்டிப்போட்டு போட்டுது.
நமசிக்கு நட்டமெண்டாலும் இதைப்போல எல்லாரும் எதேன் விதத்திலை வெளிக்கிட வேணும். அந்தாளுக்கு அறுபது வயதாகுது தங்களை அவமானப்படுத்தினதிற்காக நமசிக்கு துரோகி எண்டு பட்டம் சூட்டி ஆளைத் கட்டலாம் அது வேறு விசயம் ஆனால் நமசியின்ரை துணிவு எத்தனை பேருக்கு வரும். எல்லாருக்கும் துணிவு வந்தால் எத்தினை பேரை இவையாலை கட்டேலும். நமசி தன்னாலை தாங்கேலாது எண்டு வந்ததாலை தான் வாறது வரட்டும் எண்டு நினைச்சு இதைச் செய்திருக்கு.

இது எப்பவோ நடக்கப்போற ஒரு நல்லதுக்கு தொடக்கம் போல கிடக்கு."

வாத்தியார் எத்தனைதரம் சொல்லுறது ஒருத்தருக்கும் விளங்காத மாதிரி ஈரோஸ் பாஷையிலை பேசாதேயுங்கோ எண்டு. அதை விடுங்கோ போனகிழமை நடந்த வேடிக்கை ஒண்டை சொல்ல மறந்துபோ போனன்.

என்ன பிள்ளையர் சொல்லும் உம்மட்டை இந்தமுறை கனக்க விசயம் ஸ்றொக் இருக்கு போல இருக்கு.

நேரம் போகயில்லை எண்டாப்போல உடுப்பனை வெளிக்குளாலை இறங்கி தையிட்டி சந்தி வரைக்கும் காலாற நடந்து வருவம் எண்டு நடந்து போனன். உடுப்பனை வெளிக்குளிளை நடக்கேக்குள்ளை தூரத்திலை ஐந்து சாறு பொடியள் எதையோ கயிறு கட்டிப்போட்டு இழுத்துக்கொண்டு வந்தாங்கள். என்னடா பொடியள் இவ்வளவு கயிறு கட்டிப்போட்டு இழுத்துக்கொண்டு வாறாங்கள் எண்டு கொஞ்சம் கிட்டப்போய் கண்ணை கூர்மையாக்கி பார்த்தன் விறைச்சுப்போனன் வாத்தியார்."

என் பிள்ளையர் என்ன பிரேதமோ.

இல்லை வாத்தியார் உந்த வல்லித்தம்பியின்ரை நடராசு அது மூண்டோ நாலோ படிக்குது கட்டையும் பெரியாம்பியின்ரை கிருத்தி அவரும் நடராசுவோட படிச்சு முத்தான். வாத்தியிலை கெற்றப்போனதாலை அவர் முடிச்சுக்கொண்டு திரிஞ்சதுகள். இதுகளளவு இளிறும் மூண்டு அதுகளை எனக்கு அறெண்டு விளங்கேல்லை. அதுக்கொரு வெளிமாதிரி ஒரு பாரை இழுத்துக்கொண்டு கட்டிப்பட்டு வந்ததுகள். கொஞ்சம் கிட்டவந்தாப்பிறகு பார்த்தால் எல்லாம் பெரிய பெரிய தலைக்குகள். பொடியளாலை ஏன் தூக்க ஏலாதிலை பின்னை வெளிற்றிலை பிடிச்சு இழுத்துக்கொண்டு வருகினம். எங்கேயாவது இயக்கப் பொடியளிட்டை களவெடுத்து போட்டாங்களோ சிதறுவார் எண்டு நினைச்சன்.

என்ன நடக்குது பாப்பம் எண்டு நினைச்சு பனை ஒண்டுக்கு பக்கத்திலை ஒதுங்கினன். இழுத்துக்கொண்டு வந்த பொடியள் ஒரு கரையோட வைச்சிட்டு கிண்டிட்டு மறிக்கத் தொடங்கினாங்கள். இவை எங்கேயோ களவெடுத்துக்கொண்டு வந்தால் இப்படிப் பயப்பிடாமல் வைச்சிட்டு விளையாட மாட்டாங்கள். அப்படியெண்டால் இவங்களுக்கு எங்காலை இந்த நவீன தலைக்குகள் எண்டு மண்டையைப்போட்டு குழப்பிக்கொண்டிருந்தேன். டூ, பூம், பாய், அடி எண்ட சத்தமெல்லாம் நின்றுபோச்சு. பொடியள் திரும்பவும் தலைக்குகளை முக்கி முக்கி இழுத்துக்கொண்டு போனாங்கள். எங்கபோகினம் எண்டு நானும் கொஞ்ச தூரத்திலை பின்னாலை போனன். றோட்டு வந்தது. அங்க பார்த்த பிறகு எனக்கு இரட்டை

www.padippakam.com

விறைப்பாய் போச்சு.
என் பிள்ளையர் என்ன பார்த்தனீர்.
என்ன பார்த்தனீரோ. நான் பார்த்த இடம் சென்றி வாத்தியார். பொடியள் இழுத்துக்கொண்டு வந்த சைக்கிள்களை கடைப்பட்டு வாங்கி நிப்பாட்டி வைச்சுப்போட்டு இந்தப் பொடியள்தான் வாத்தியார் சென்றிக்கு நிக்கிறாங்கள்.
பிறகென்ன பொடியள் கெதியாய் அடிச்சு தமிழீழம் பிடிச்சுப்போடுவாங்கள் கெதியாய் போய் முகத்தைக் கழுவும். உம் வீட்டு தேத்தண்ணி குடிக்கவும் வரி வரும்போலை அசைக்குள்ளை தேத்தண்ணியைக் குடியும் வாறன் எண்டவாறு வாத்தியார் நடையைக் கட்டினார்.

# பெண்கள் சந்திப்பு

ஏஸ்வரி
ESGEN

12.5.90ல் கேர்ண நகரில் 20க்கு மேற்பட்ட ஜேர்மன் வாழ் தமிழ் பெண்களின் சந்திப்பு நடைபெற்றது. சந்திப்புக்கான ஒழுங்குகளையும் நிகழ்ச்சிகளையும் திருமதி கங்காதரன் ஏற்பாடு செய்திருந்தார். சுய அறிமுகத்துடன் தொடங்கிய சந்திப்பு புதிதாக பங்குபற்றிய பெண்களுக்காக கடந்த சந்திப்புப் பற்றிய விபரங்களையும் வெளிப்படுத்தியது. அடுத்து "எங்கள் சமூகமும் பெண்களும்" என்ற சுமங்களா சிவரமணியின் கட்டுரை சகோதரி ஒருவரால் வாசிக்கப்பட்டது. இக்கட்டுரையில் கூறப்பட்டவைகள் பெரும்பாலும் மறுக்கப்படமுடியாத உண்மைகளாகவே இருக்கின்றன. இக்கட்டுரை பெரும்பாலோரால் வரவேற்கப்பட்டது. கலந்துரையாடலின்போது பெண்கள் தனித்து ஏன் வாழ முடியாது என்ற கருத்தை இங்குவாழும் ஐரோப்பியப் பெண்களின் சமூக நிலையை உதாரணமாக காட்டி எங்கள் சமூகமும் அவ்வாறு மாற்றி அமைக்கப்படின் எங்கள் பெண்களாலும் தனித்து வாழமுடியும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. எங்கள் சமூகத்தில் பெண்கள் தமது திறமைகளை அறிந்து கொள்ளாமல் அடங்கிக்கொள்வதால் மேற்கூறப்பட்ட மாற்றங்கள் ஏற்பட அதிக காலம் எடுக்கும் என்ற கருத்தும் கூறப்பட்டது. எது எப்படியாயினும் பெண்களின் மாற்றம் உறுதிப்படுத்தப்படாமல் சமூகம் மாறும் என்பது முயற்கொம்பே. குடும்பத்தில் பிரச்சனையுள்ளோர்தான் இதில் கலந்து கொள்கிறார்கள் என்று மற்றையோரால் கொச்சைப் படுத்தும் முறையில் சொல்லப்படும் கருத்தை சந்திப்பில் கலந்துகொண்ட சிலர் கூறினார்கள். குடும்பத்திலுள்ள


படிப்பகம்

www.padippakam.com

ஆண்களிடம் பெண்கள் பற்றிய புரிந்துணர்வின் வறுமையை சிலர் கோடிட்டுக் காட்டினார்கள். இக் கருத்து எல்லா ஆண்களுக்கும் பொருந்தும் என்பதை ஏற்க முடியாது. இருந்தாலும் இக்குறைபாட்டில் மனிதாபிமானன உணர்வு மேலோங்கப்படாத தன்மை வெளிப்படுத்தப்பட்டிருப்பதை உணர முடிகிறது. அடுத்ததாக பெண்கள் ஒன்று கூடுவது ஏன் அவசியம் என்ற நிகழ்ச்சி இடம் பெற்றது. இதில் பெண்கள் ஒன்று கூடுவது ஏன்? கூடுவதற்கான காரணம் என்ன?. பாதிப்பு—இப்பாதிப்பு தனிமனிதரா-லா?, சமூகத்தாலா?, சூழலினாலா?

தனிமனிதர்— ஆணா?, பெண்ணா?

ஆணாக இருந்தால் கணவனா?, தகப்பனா?, சகோதரனா?, மகனா? மருமகனா? உண்மையில் இவர்களினால்தான் பாதிப்பா? இவர்களால் மட்டுமல்ல பெண்களாலும் பாதிப்பு இருக்கிறதே. தாய், சகோதரி, மாமி, மச்சாள் இன்னும் உறவினர். பெண்ணால் ஏன் பெண்ணிற்கு பாதிப்பு ஏற்படவேண்டும்? காரணம் சமூக அமைப்புமுறை சமூகத்தில் பெண்கள் அங்கத்தவர்கள் இல்லையா? யாரில் இந்தப் பிழை சமூகத்திலா பெண்களிலா, ஆண்களிலா. இப்பிழைகளுக்கு ஒருவகையில் பெண்களும் காரணம். பெண்களில் என்ன பிழை இருக்கிறது? பெண்களுக்குள் இருக்கு

கும்

பிழைகளைப் பெண்களே விழுங்கிக்கொள்கிறார்கள். பெண்கள் விழுங்குவதற்கான அடிப்படைக் காரணம் என்ன? பெண்களைப் பற்றி பெண்கள் விளங்காமல் இருப்பது , பெண்களைப்பற்றி அறிவதற்கு பெண்கள் என்ன செய்யவேண்டும் ?பெண்கள் சாகத்திலிருந்து விடுபடவேண்டும். பெண்களால் விடுபட முடியுமா?விடுபட முடியாது. காரணம் எங்களுடைய சமயம், கலாச்சாரம் பண்பாடு என்று பெண்கள் அலட்டிக்கொள்ளும் பழைமையைப் பேணும் தன்மை. இவைகளை உடைப்பதற்காகத்தான் பெண்கள் ஒன்று கூடவேண்டும். உடைக்கப்படவேண்டும் என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டால் பெண்கள் ஒன்று கூடுவது அவசியம். மேற்கூறிய காரணங்களை உடைக்க வேண்டுமெனில் உதிரிகளாக இருக்க முடியாது. பெண்கள் ஓர் அமைப்பாக வேண்டும். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதிற்கிணங்க எங்கள் பலத்தையும் பெருக்கி பாதிப்புக்களை வென்றெடுக்க ஒன்று கூடுவது அவசியம் என்ற கருத்தை எழுதி வாசித்தேன். சந்திப்பாளர் ஏன் அமைப்பாக வேண்டும் என்ற கேள்வியை எழுப்பினார். பெரும்பாலானோர் அமைப்பின் அவசியத்தை உணர்ந்து அதனை ஏற்றுக்கொண்டனர். எத்தனை தடவைகள் எப்படிக் கூடினாலும் உதிரிகளாய் இருந்து போராட முடியாது என்ற உண்மையை விளங்கிக்கொள்ளும் வரை அமைப்பாவதின் அவசியம் விளங்கிக்கொள்ள முடியாததாகவே இருக்கும், என்பதை அவரின் கேள்வி எனக்கு உணர்த்தியது.

அடுத்தது மதிய போசனம். அதையடுத்து பிலிப்பைன்ஸ் நாட்டுப் பெண் ஒடுக்குமுறையும் அவர்களின் துயர வாழ்வும்

 படிப்பகம்

www.padippakam.com

படமாக காண்பிக்கப்பட்டது. அதைப்பற்றிய கருத்துப் பரிமாறல்களை அடுத்து பாரதியின் கவிதையொன்று வாசிக்கப்பட்டு, வர்ணனை என்பது விவாதத்திற்கு உள்ளாகியது. அழகியல் என்பது ஒரு கலை, வர்ணனை அதன் அம்சம். பெண் வர்ணிக்கப் படக்கூடாதவளாகவோ அல்லது கவிஞனுக்கு பெண்ணை வர்ணிக்கும் உரிமை மறுக்கப்படுவதோ நாகரீகமா?. மனிதனின் குணாம்சங்கள்தான் எழுத்துக்களாகவும், கருத்துக்களாகவும் வெளிவருகின்றன.

பெண்கள் தங்களை நகைகளால் சேலைகளில் அலங்கரித்து அவைகளைப் பற்றியே பேசுவதைவிட அந்தச் செலவினங்களுக்கும், நேரத்திற்கும் இலகுவில் கையாளக்கூடிய தொழில் நுட்பசாதனங்களையும் கருவிகளையும் கையாள்வதன் மூலம் அறிவு பூர்வமான பயனைத் தருவதுடன் பொழுதைக் கழிப்பதும் சிறந்த விடயங்களாகும் என்ற கருத்துக்களும் பரிமாறப்பட்டன.

இதையடுத்து எதிர்கால ஆலோசனைகளாக வருடத்திற்கு ஒருமுறை மலர் வெளியிடுதல், பாதிப்புற்ற பெண்களுக்கு நிதியுதவி செய்தல், 3 மாதங்களுக்கு ஒருதடவை சந்தித்தல், தொடர்ந்து சந்திப்பு நடத்த ஒரு செயற்குழு தெரிவு செய்யப்பட்டு அடுத்த சந்திப்பை என்னப்பெற்றால் என்னும் நகரத்தில் நட்த்துவதாக முடிவு எடுத்து நான்கு மணிக்கு சந்திப்பாளர்கள் பிரிந்து கொண்டனர்.


## ST. PATRICK'S DAY

சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்கட்கு வணக்கம்!

நாம் இவ்வாண்டு சம்பத்திரிசியார் விழாவை மேற்கு ஜேர்மனியில் சிறப்பாக நடாத்த உத்தேசித்து இது விடயமாக பழைய மாணவர்கள் அனைவரையும் தொடர்பு கொள்ள முயற்சிக்கிறோம். எமது முயற்சி வெற்றியளிக்க தாங்கள் அனைவரும் பெயர் பிறந்த திகதி, திருமணமானவரா / இல்லையா? என்ற தகவல்களை கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் இது விடயமாக தங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

நன்றி-வணக்கத்துடன்

பழைய மாணவர்கள்

W.GUTSS,
ND RAMSTAEDTER STR 179 A/2
6100 DARMSTADT
WEST GERMANY.




படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் அகதிகள் உதிரிகள் அறிவுஜீவிகள்

"வெகுஜனம்" ஆசிரியர் குழுவினருக்கு வணக்கம்.

ஐரோப்பாவில் இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்கள் பற்றிய எனது கண்ணோட்டமே இக் கட்டுரை. மக்களுக்கு பிரயோசனமுள்ள பல அரசியல் கட்டுரைகளை வெகுஜனம் தொடர்ந்து வெளியிட்டுவருவதால் இக் கட்டுரையை தங்களுக்கு அனுப்பிவைக்கின்றேன். இக்கட்டுரை வெளியிட முடியாது போனால் எனக்கு திருப்பி அனுப்பும்படி தோழமையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே. வை. பாலசுந்தரம்.

தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆயுத நடவடிக்கைகளின் விளைவுகளினால் ஒரு பகுதியாக இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் மற்றும் மேற்குலக நாடுகளுக்கும் லட்சக்கணக்கில் அகதிகள் படையெடுத்தது தவிர்க்கமுடியாத அம்சமாகியது. எந்த எந்தக் கோணங்களில் எப்படி எப்படியான வகையில் அகதிகள் வெளியேறினார்கள் என்பதைப் பார்ப்போமாயின் போராட்ட பெயர்ப்பலகையை தமக்கு சாதகமாக்கிக்கொண்ட பொருளாதார அகதிகளே முதலிடம் வகிக்கிறார்கள். சிறீலங்கா தரகு முதலாளித்துவ அரசின் பொருளாதார ஒடுக்குமுறைகளும், தமிழ் பேசும் பேசும் மக்களின் நடுவில் காலம் காலமாக நிலைத்துவரும் பூர்ஷ்வா சிந்தனைகளும், முதலாளித்துவ பொருளாதார சமுதாய அமைப்பு முறைகளும்தான் இந்தப் பொருளாதார அகதிகளை ஐரோப்பிய, மேற்குலக நாடுகளுக்கு படையெடுக்கவைத்துள்ளன.

அரச பயங்கரவாதத்துக்குள் அகப்பட்ட அரசியல் அகதிகள், இயக்க அராஜகங்களுக்கு முகம்கொடுக்க முடியாமல் வந்த அரசியல் அகதிகள், உயிர் வாழமுடியாமல் தஞ்சமடைந்தவர்கள், இவர்களுக்குள் தமது அரசியல் கடைகளை திறந்து தங்களை சுயவிளம்பரம் செய்துகொள்ள, வளர்த்துக்கொள்ள ஓடிவந்த அறிவுஜீவிகள் மற்றும் அரைகுறை அரசியல் குழப்பவாதிகள். இப்படியாக பலதரப்பட்ட மக்களை உள்ளடக்கிய அகதிக

www.padippakam.com

கள் தாம் தஞ்சமடைந்துள்ள நாடுகளில் குறிப்பாக ஐரோப்பாவில் என்ன செய்கிறார்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதைவிட இவர்கள் மத்தியில் எப்படியான அரசியல் நீரோட்டம் உள்ளது என்பதை பார்ப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும். ஐரோப்பாவிலுள்ள தமிழ் பேசும் மக்களை பொருளாதார அகதிகள், அரசியல் உதிரிகள், அரசியல் அறிவு ஜீவிகள் என மூன்று வகையாக பிரித்து இவர்களின் அரசியல் நிலையைப் பார்ப்போம்.

## பொருளாதார அகதிகள்.

இவர்களுக்குள் போராட்ட சூழ்நிலையை சாதகமாகப் பாவித்து ஓடிவந்தவர்கள் பெரும்பான்மையாகக் காணப்பட்டாலும் ஏனையோரிலும் அதிகமானோர் இதற்குள் தம்மை அடக்கிக் கொண்டுள்ளனர். இவர்கள் தாம் ஈழத்தில் ஆதரவு தெரிவித்த இயக்கங்களுக்கு இங்கேயும் மாதம் சந்தாபோல குறிப்பிட்ட பணத்தை செலுத்துவதுதான் தமது அரசியல் நிலைப்பாடு என ஆரம்பத்தில் நடந்து கொண்டார்கள். அரசியல் மாற்றங்களை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு ஒரு இயக்கமும் சரியில்லை என்று நொண்டிச் சாட்டு சொல்லிக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக இலங்கைப் பட்டத்தையே மறந்து தாமும் ஒரு ஐரோப்பிய சமூகத்தின் அங்கம் என்ற சூழ்நிலைக்கு தம்மை மாற்றிக் கொண்டுள்ளார்கள். இவர்களுக்குச் சரியான அரசியல் தெளிவை இயக்கங்கள் ஏற்படுத்தவில்லை அதனால்தான் இப்படிப்போய்விட்டார்கள் என்றொரு குற்றச்சாட்டை இயக்கங்கள்மேல் சுலபமாகப் போட்டுவிட்டு எல்லோரும் தப்பிக்கொள்ளப் பார்க்கிறார்கள். போராட்டக்களத்திலேயே மக்களை அரசியல் மயப்படுத்த அந்த அராஜக இயக்கங்களால் முடியவில்லை. இங்கும் மக்கள் மத்தியில் அது தான் நடந்தது. அதைவிட மேலாக அரசியல் கூட்டங்கள் என்று சொல்லிக்கூடி, பொலிஸ் நிலையத் தாக்குதலில் எத்தனை பொலிஸ் இறந்தன கண்ணி வெடியில் எத்தனை இராணுவத்தின் உடல்கள் சிதைந்தன என்று கேள்வி கேட்கவைத்து பதில் சொல்லிவிட்டு சந்தாப் பணம் வாங்கிச் செல்வதுதான் அரசியல் தெளிவாக்கம் என்ற கலாச்சாரத்தை இயக்கங்கள் நடைமுறைப்படுத்தியபோது எல்லோரும் மௌனியாகிவிட்டு இப்போது குற்றச்சாட்டுக்களை அடுக்குவதில் அர்த்தமில்லை.

சொல்லப்போனால் நான் பக்கத்துவீட்டுக்காரனைவிட பணக்காரனாக வேண்டுமென்னும் குடாநாட்டுச்சிறப்பம்சத்தை உள்ளடக்கிக்கொண்டு விமானமேறி வந்திறங்கியவர்களிடம் எத்தனை மணித்தியாலம் இருந்து ஓதினாலும் அவர்களுடைய எண்ணமெல்லாம் பணம் சம்பாதிப்பதில் இருக்கும் பார்வை மட்டும் கூட்டத்தில் பேசுபவர்பக்கமிருக்கும். நீ சொல்வதைச்சொல்லு நான் என்பாடு என நினைப்பவர்களிடம் அரசியல் மயப்படுத்தல் முயற்சிகள் எல்லாம் செவிடன் காதில் ஊதிய



படிப்பகம்

www.padippakam.com

சங்குதான், புறக்கூடத்தில் வார்த்த நீர்தான். யதார்த்த புலத்து நிலையை விளங்கவைக்க ஒரு சிலர் எடுத்த முயற்சிகள் இப்படித்தான் கல்லில் நார் உரிக்கும் வேலையாக முடிந்தது.

## அரசியல் உயிரிகள்.

இவர்களுள் ஒருபகுதியினர் தமிழீழம், ஆண்ட பரம்பரை உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என்ற சிந்தனைகளில், வீர வசனங்களில் தம்மை அடிமைப்படுத்தியவர்கள். இவ்வுணர்வில் சற்றும் மாறாமல் வெளி உலகையும் பார்த்து அறிந்திராமல் நாம் கிணற்றுத் தவளை இல்லை வெளியில் வந்தாலும் தவளை தவளை தான் என்னும் பாணியில் அரசியல் வேலைகளை தமது எண்ணங்களுக்குச் சார்ந்த இயக்கங்களினூடாகச் செய்துகொண்டு நமது சமுதாயம் திருந்தினால் பழுதடைந்துவிடும் என்னும் பாணியில் நடைமுறையில் இருந்து வரும் சமுதாய அமைப்பை அப்படியே கட்டிக் காத்தவரை ஐயமற முறுக்கும் காவல்காரர்களாக பணிபுரிகிறார்கள். இவர்களுள் சிலர் இவற்றை சில சஞ்சிகைகளை வெளியிட்டு எழுதியும் வருகிறார்கள். உலகம் நாகரீகத்தில், விஞ்ஞானத்தில் 21ம் நூற்றாண்டை நோக்கி விரைநடை போடும்போது நாம் கற்காலத்திலேயே இருக்க வேண்டும் என பிடிவாதம் பிடிக்கும் விற்பன்னர்கள் இவர்கள்.

இன்னொரு பகுதியினரை எடுத்துக்கொண்டால் தேசிய விடுதலையை ஆண்ட பரம்பரைத் தமிழீழப் பாணியிலும் சமுதாய மாற்றத்தை முற்போக்குப் பாணியிலும் கலந்த ஒரு உப்புப்போட்ட பாயாசமாக மக்கள் முன்வைத்த இயக்கங்களை நம்பி, இவர்கள் உண்மையான முற்போக்குவாதிகள் என எண்ணி, ஏமாந்து போனவர்கள். இளைஞர்களில் பெரும்பான்மையினர் இந்தப் பாயாசக் கவர்ச்சியில் மயங்கி இணைந்து சிதறிச் சீரழிந்து போனவர்கள். இவர்களில் பலபேர் பாலச்சந்தர் படம் பார்ப்பதென்றால் பெருமை என்பதுபோல தன்னை ஒரு முற்போக்குவாதி என்று சொன்னால் பெருமை என்னும் பாணியில் நடந்து கொள்பவர்கள். யதார்த்த புலத்தைப் பற்றி தெளிவு எதுவுமின்றி நியூ செஞ்சரி புத்தகம் நாலு படித்தால் புரட்சியை செய்துவிடலாம் என நம்பிய பரிதாபத்திற்குரியவர்கள். இயக்கங்கள் தம்மை ஏமாற்றி விட்டன என்பதையும் புரிந்துகொண்ட போது போராட்டத்தில் விரக்தியுற்று ஐரோப்பாவில் தஞ்சமடைந்து குறுகிய காலத்தில் அடங்கிப் போனவர்கள். இவர்களுள் சிலர் இன்னும் இங்கு முற்போக்கு அரசியலை தாம் படித்த நாலு புத்தக வரிகளை வைத்துக்கொண்டு அல்லது இங்குள்ள நூல் நிலையங்கள் மூலம் இன்னும் நாலைப் படித்துக்கொண்டு முற்றும் தெரிந்த சமூக விஞ்ஞானிகளாய் எழுதப்பேசத் தொடங்கி எங்கு போகிறோம், என்ன பேசுகிறோம், என்ன எழுதுகிறோம் என்பது தெரியாமலே கால்போன போக்கில் போய்க்கொண்டு மக்களைக் குழப்பும் விளையாட்டுப் பிள்ளைகள். கற்பவற்றைக் கசடறக் கற்று அதற்கு தக நிற்பதே கற்பவனுக்கும் அவன் சார்ந்த சமூகத்திற்கும் பயனளிக்கும்

www.padippakam.com

என்பதை இவர்கள் புரிந்துகொள்ளும்போது, இவர்கள் தம்மை வளர்த்துக்கொள்ளும்போது சமூகத்திற்கும் பயன்பட இவர்களுள் சிலராவது முன்வருவார்கள் என எதிர்பார்க்கலாம்.

சமூகப்பார்வையில் தெளிவும் தேசிய விடுதலை பற்றிய தூர தரிசனமும் நடைமுறையில் ஓரளவாவது முற்போக்கு எண்ணங்களும் கொண்ட ஒரு சில இளைஞர்கள் இயக்க அராஜகவாதத்தினால் ஐரோப்பாவில் தஞ்சமடைந்தாலும் களத்திலுள்ள முற்போக்கு சிந்தனையாளர்களுடன் தம்மை இணைத்துக்கொண்டு தெளிவான கருத்துக்களைப் பேசியும் எழுதியும் வருகிறார்கள். களத்தில் உண்மையான சமாதானம், அமைதி, ஐக்கியம், அரசியல் தீர்வு பற்றி சிந்திக்காத, சிந்திக்க விரும்பாத மக்கள் மத்தியில் இவ் இளைஞர்கள் பல எதிர்ப்புக்களை சம்பாதிக்க வேண்டியுள்ளது. களத்து முற்போக்கு சக்திகளை ஏமாற்றுக்காரர்கள் என பட்டம் சூட்டுவதன் மூலம் தம்மை முற்போக்கு சக்திகள் எனக் காட்ட முற்படும் மெத்தப் படித்தவர்களால் பேச்சில்,எழுத்தில் திட்டமிடப்பட்டு இவ்விளைஞர்கள் ஒதுக்கப்பட்டு இருப்பினும் உறுதியுடன் எழுதிபேசிவரும் இவர்கள் நிச்சயம் ஒரு நாள் இனம் காணப்படுவார்கள்.

அறிவு ஜீவிகள்.

ஐரோப்பாவில் வந்துள்ள தமிழ் பேசும் மக்கள் முன்னால் கடைகளைத் திறக்க வந்துள்ள அறிவு ஜீவிகளையும் பார்க்க வேண்டியுள்ளது. இவர்களுள் தாம் தப்பியோடி வந்த குற்ற உணர்வுடன் களத்து புத்தி ஜீவிகளின் முற்போக்கு நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவு தெரிவிப்பவர்களை விரல் விட்டு எண்ணிவிட முடியும். பெரும்பான்மையினர் மக்களைக் குழப்பிவிட்டு இன்னும் கீழே இறங்கி, இயக்கங்களுள் முற்போக்கு சிந்தனைகள், மார்க்சிசம் என்ற சொற்களில் விரக்தி அடைந்து ஏமாற்றப்பட்டு வந்திருக்கும் இளைஞர்களை இன்னும் குழப்பிவிட்டு அந்தக் குழம்பிய குட்டையில் மீன் பிடித்து ஆதாயம் பெற நினைக்கும் ஏமாற்றுக்காரர்கள். தாம் படித்ததைக்கொண்டு அரசியல் வியாபாரம் செய்ய வந்த வியாபாரிகள். இவர்கள் 83க்கு முன்பு சிறிலங்காவில் செய்ததை இப்போது இங்கே செய்யத்தொடங்கியுள்ளனர்.

அரசியல் புத்தி ஜீவிகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று புத்தகப் பூச்சிகள் இவர்கள் அரசியல் அறிவாளிகள். இன்னொன்று தாம் படித்தவற்றை மக்கள் மத்தியில் நடைமுறைப்படுத்துபவர்கள். இவர்கள் அரசியல் விஞ்ஞானிகள். முன்னவர்களால் அவர்களுக்கே பிரயோசனம். பின்னவர்களால் மக்களுக்கே பிரயோசனம்.

இதைச் சற்று விரிவாகப் பார்த்தால் இன்று எத்தனை அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும் உயிராபத்துக்கள் தென் பட்டாலும் கலங்காது மயங்காது மக்களுடன் மக்களாக நின்று மக்களின் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து மக்களுக்கு தாம் படித்தவற்றைக் கொண்டு சேவையாற்றும் அரசியல் ஞானிகள் விமர்சனங்களுக்கப்பாற்பட்டவர்கள். இவர்களுக்கு ஓடவா தெரியாதா? இவர்களுக்கு கிடைப்பதெல்லா


படிப்பகம்

www.padippakam.com

ம் எச்சங்கள் பேச்சுகள் எழுதுகிறார்கள். இருப்பினும் மக்களின் முன்னேற்றத்துக்காக தன்னை அர்ப்பணித்தவர்களுக்கும் இவர்கள் இல்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் அரசியல் வரலாற்றில் இடம் பெறுவார்கள். மக்களுக்காக மடிய முன்வந்த இந்த அறிவு ஜீவிகளை விமர்சனம் செய்வதன் மூலம் தம்மை பிரபல்யப்படுத்துபவர்கள் தான் ஐரோப்பிய தத்துவ புத்தி அகதிகள். களத்தில் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முடியாத இந்தப் போராளிகளுக்கு களத்தில் உள்ள முற்போக்கு சக்திகளை குறைகூறும் (நல்லவற்றை பாராட்ட தெரியாத) ஒரு என்ன அருகதை இருக்கிறது. இவர்கள் உயிர் வாழுவதற்கும் நாம் படித்தவற்றை புதிய புதிய வடிவங்களில் எழுதிக் கொண்டிருப்பதைவிட வேறெதுவும் செய்யமுடியாது.

இவர்களின் பெரும்பான்மையினர் மாவோயிய உயிரிகளாகவே காணப்படுகிறார்கள். இயக்கங்களின் முற்போக்குத் தனங்களில் வெறுப்படைந்து விரக்தியுற்ற உதிரி இளைஞர்கள் இந்த அறிவு ஜீவிகளின் வலைகளுக்குள் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறார்கள். இவர்கள் ஐரோப்பாவில் ([illegible]) அதிகமாக சஞ்சிகைகளை வெளியிட்டு வருகிறார்கள். இவர்களுக்கிடையில் ஒரு சங்கிலித்தொடர்பு ஏற்பட்டுள்ளது சஞ்சிகைகள் மூலம் தெரிகிறது இவர்களுக்குப் பின்னால் இந்த வியாபார அறிவாளிகள் நின்றுகொண்டு இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். நாலு புத்தகம் படித்த குழப்பவாதிகள் இருக்கும் இளைஞர்களுக்கு இந்த அறிவாளிகள் பெரும் வரப்பிரசாதம்.

இவர்கள் எதிர்பார்த்திருக்கும் சக்தியின் தொடர்மூலம் என்ன சொல்லி வருகிறார்கள்? இயக்கங்கள் எதுவுமே சரியில்லை. ஆகவே ஒரு புதிய சக்தி உருவாக்கப்பட வேண்டும். இது நியாயமானது என்று வைத்துக்கொண்டாலும் இந்த இயக்கங்களை இவர்கள் விரும்பும் சரியான பாதையில் வருவதற்கு கடந்த காலத்தில் இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? எப்போதாவது இயக்கங்களின் நல்லவற்றை பாராட்டி இருக்கிறார்களா? இல்லை. அல்லது திருத்தப்பட வேண்டியவற்றை சுட்டிக்காட்டியுள்ளார்களா? இல்லை. ஆனால் வழக்கறிஞர்களாய் இருந்து குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசுவதும் நீதிபதிகளாய் இருந்து குற்றவாளிகளாய் தீர்ப்பு சொல்வதையும் தான் செய்து வந்துள்ளார்கள். ஏன் அப்படி நடந்து கொண்டுள்ளார்கள். இளைஞர்களை எடுத்துக்கொண்டால் தாம் இயக்கங்களில் இருந்த காலத்தில் மாற்று இயக்கங்களின் மீது காழ்ப்புணர்ச்சி வளர்க்கப்பட்ட முறை. தாம் சார்ந்து இருந்த இயக்கங்களினால் ஏமாற்றப்பட்டு விரக்தி. அறிவு ஜீவிகளை எடுத்துக்கொண்டால் இவர்கள் ஈழத்தில் ஒரு அமைப்பாக முடியாமல் போன ஆதங்கம். உண்மையான முற்போக்கு சிந்தனையாளர்கள் களத்தில் நின்று போராடிய முற்போக்கு சக்திகளுடன் இணைந்து கொண்டதால் தான் தனிமைப்பட இந்த முற்போக்கு இயக்கங்கள் (அப்படி எதுவும் இருப்பதாய் இவர்கள் ஏற்றுக்கொண்டதில்லை) காரணமாய் இருந்ததென்னவோ எரிச்சல் கோபம், பொறாமை. இவற்றினால் தான் இவர்கள் எல்லா இயக்கங்க

www.padippakam.com

னையும் குற்றம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இக் குற்றச்சாட்டுக்களை களத்தில் நின்று சொன்னால்தான் பிரயோசனமிருக்கும் ஆனால் இவர்கள் — — — — — —?.

இந்த அறிவு ஜீவிகள் முன்வைக்கு பிடித்துக்கொண்டிருக்கும் அடுத்தது இந்திய எதிர்ப்பு வாதம். இதை இவர்கள் முன்வைக்க பிடிக்க நியாயம் இருக்கிறது. காரணம் இவர்களின் இந்திய நண்பர்கள் நக்சலைட்டுக்கள் என்னும் பெயரில் இயங்கியபோது இந்திய அரசு அவர்களை ஒடுக்கி இயங்க முடியாமல் பண்ணியது. ஈழப்போராட்ட காலத்தில் இவர்களின் ஈழத்து நண்பர்கள் என்.எல்.எவ்.ரீ யாக வேலை செய்தபோது நக்சலைட்டுக்களுடன் தொடர்புகொண்டார்கள் என்பதனால் இந்திய அரசு தமிழ் நாட்டில் இயங்கத் தடை செய்தது. அதன்பின்போதுக்கு அவர்கள் என்.எல்.எவ்.ரீ பிரிந்து பி.எல்.எவ்.ரீ ஆனார்கள். ஆக இவர்களை இயங்க முடியாமல் பண்ணியதில் இந்தியாமீது இவர்களுக்கு சொல்லொணாக் கோபம். அதிலிருந்து பிறந்ததுதான் இந்திய எதிர்ப்பு வாதம். இந்தியாவுக்கூடாக பூகோளரீதியில் இலங்கை அமைந்தது யார் செய்த தவறு? இந்தியாவின் அழுத்தமும் இறுக்கமும் தளர்வும் உதவியும் யாரும் கேளாமலே இந்தியா மேற்கொண்டுவருகிறது. இது சரியா பிழையா என்பதைவிட இதனோடு நாம் பயணம் செய்யவேண்டிய கட்டாயத்தில், நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம் என்னும் உண்மையை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். இதில் எங்கள் தந்திரோபாயங்களை பாவித்து நாம் அரசியல் இலாபங்களை தேடமுடியும். இதைவிட இந்தியாவின் அழுத்தங்களை குறைப்பதற்கு எமக்குள் இருக்கும் ஐக்கியமின்மையையும் புரிந்து கொள்ளவேண்டும். இவற்றிற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவுமின்றி வெறுமனே காட்டுக் கூச்சல் போடுவது தம்மை விளம்பரப்படுத்துவதற்கே.

இந்த அறிவு ஜீவிகளின் போதனைகளால் உள்வாங்கப்பட்ட இளைஞர்கள் இப்போது சவ சலம்பது புதிய இயக்கம் உருவாக்கப்படவேண்டும். நல்லது இருப்பவற்றை விட மிக மிக நல்லதான ஒன்று வந்தால் வரவேற்கலாம். ஆனால் அதை இவர்கள் ஐரோப்பாவில் அல்லவா கட்ட முயற்சிக்கிறார்கள். இவர்களுக் கெல்லோருக்கும் வெள்ளி என்ற நினைப்போ தெரியவில்லை. ஐரோப்பாவிலிருந்து இயக்கத்தொடங்கி ஈழத்தில் போய் இறங்கப்போகிறார்கள் போலும். நல்லது வரவேற்கலாம். ஆனால் ஒரு பிரச்சனை: இவர்களுக்கு இப்போது களத்தின் என்ன தொடர்பு இருக்கிறது? இல்லையா உண்டா? இல்லையானால் களத்தின் உண்மை நிலை புரியாது தொடர்பேச்சு இல்லாது இங்கிருந்து

வெறுமனே சந்தி அரசியல் நடத்தி பிரயோசனம் ஏதும் உண்டா? தொடர்பு உண்டாயின் நல்லது ஒரு புதிய சக்தி உருவாவதை வரவேற்போம். களத்தில் இவர்கள் மக்கள் முன்னால் அரசியல் வேலைகளை சுதந்திரமாக ஜனநாயக ரீதியில் செய்யவேண்டுமாயின் இவர்கள் எல்.ரீ.ரீ.ஈ இனரை சந்திக்கவேண்டும். அவர்கள் தம்மைத் தவிர வேறு யாரையும் இயங்க அனுமதிப்பதில்லை. மரணதண்டனை விதிக்கிறார்கள். எல்.ரீ.ரீ.ஈ யின் பாசிசம் அழிக்கப்படாதவரை களத்தில் ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம், அமைதி சமாதானம் தோன்றா வழியே இல்

www.padippakam.com

யை எப்படி எப்போது உள்ளங்கை நெல்லிக்கனி. ஆக எல்.ரீ.ரீ.ஈ யுடனான இவர்களின் நிலைப்பாடு என்ன? அவர்களின் பாசிசத்திற்கு அடிபணிந்துகொண்டு அரசியல் வேலை செய்யப் போகிறார்கள் என்றால் இவர்கள் மக்களுக்கு என்ன செய்யப்போகிறார்கள். புலிகளுக்கு அடிபணிந்து போனவர்கள் என்றால் அந்த வேலையை ஈரோஸ் செய்கிறது. ஆகவே இன்னொரு ஈரோஸாக இருக்க முடியுமானால் இவர்களை யாரும் நம்ப வேண்டும். எதிர்த்து நிற்பார்களா? அப்படியானால் எதிர்த்து நிற்பவர்கள் சந்திக்கும் அத்தனை பிரச்சனைகளையும் கஷ்டங்களையும் அவமானங்களையும் உயிரிழப்புக்களையும் சந்திக்க தயாராக இருக்க வேண்டும். அதற்கு இவர்கள் தயார் என்றால் இன்று எல்.ரீ.ரீ.ஈ இனை எதிர்த்து நிற்பவர்களை இவர்கள் என்ன காரணமாக விமர்சிக்கிறார்கள். இவர்கள் இன்று விமர்சிப்பது சரியாயின் நாளைக்கு இவர்களுக்கும் இதே விமர்சனம்தான். இன்று எதிர்த்து நிற்பவர்கள் இவர்களின் கண்ணுக்கு பிழையானவர்கள் என்றால் நாளைக்கு இவர்களும் பிழையானவர்கள்தான். அப்படியானால் இவர்கள் கூறும்படியே பிழையான இவர்களை மக்களுக்கு ஏன்? ஆகவே எல்.ரீ.ரீ.ஈ சம்பந்தப்பட்ட இவர்களின் நிலைப்பாடு என்ன? (இங்குள்ள எழுத்தில் களத்தில் உள்ள நடைமுறையில்) இந்திய எதிர்ப்பு அறிவாளிகள் சொல்லிக் கொடுத்த சில இலக்குகள் இந்திய இலங்கைத் தொழிலாளர்கள் இணைந்து இந்திய இலங்கை முதலாளித்துவத்துக்கெதிராக போராடுவோம் என்ற கல சலக்கிறார்கள். அண்மையில் சிங்கராயர் இந்தக் கருத்தை வெளியிட்டதாகத் தகவல். அப்படியானால் இதற்கு சிங்கராயரிசம் என்று பெயர் வைக்கலாம். நடைமுறையில் தொழிலாளர்கள் சாதிக்குள் அகப்பட்டுத் தவிக்கிறார்கள். மலையகத்தில் நவீன அடிமைகளாக மக்கள் வாழுகிறார்கள். சிங்களத் தொழிலாளர்கள் சுதந்திர வர்த்தக வலயங்களில் வெளிநாட்டு அட்டைகளால் உறிஞ்சப்படுகிறார்கள். இலங்கைத் தீவிலேயே உழைக்கும் மக்களை முதலாளித்துவக் கும்பல்கள் பங்குபோட்டு சுரண்டுகிறது. இதற்கு இவ்வரை நடைமுறைக்கு ஒத்துவரக் கூடிய ஒரு தீர்வை எழுத அல்லது முன்வைக்க முடியாத அறிவுஜீவிகள் இன்னுமொருபடி மேலே போய் இலக்குகளை குவித்துள்ளார்கள்.

தெரியாத ஊருக்கு புரியாத பாதையில் யானை ஏறும் இந்தக் கூட்டத்தால் அநியாயமாக ஒரு இளம் சந்ததி முற்போக்கு சக்திகளை மேலும் மேலும் வெறுத்து காறித் துப்பப்போகிறது. மக்கள் மண்டையைப் போட்டு உடைக்கப்போகிறார்கள். ஒரு முற்போக்கு சக்தியின் நல்லெண்ணற்ற வரவேற்று பிழைகளை சுட்டிக்காட்டி திருத்தி செழுமைப் படுத்தும்படி விமர்சிப்பதே தோழமையான விமர்சனம். கொள்கை முரண்பாடுகள் இருப்பினும் ஒரே நோக்கம் கொண்டவர்கள் என்ற நோக்கிலாவது குறைந்த பட்சமாவது ஒத்துப்போகாமல் மதங்கள் தாம் தான் சிறந்தது மற்றவை கூடாது என்று சொல்வதைப்போல் காழ்ப்புணர்ச்சி ரீதியில் குற்றச்சாட்டுக்களை அடுக்கி வருவதன் மூலம் தம்மை நல்லவர்களாகக் காட்டமுனையும் இவர்கள் நேர்மையான முற்போக்



படிப்பகம்

www.padippakam.com

குவாதிகளா என்ற கேள்வி இங்கே எழ நியாயமிருக்கிறது. எது எப்படி யிருப்பினும் என்.ரி.ரீ. அராஜகம் புரிகிறது அது சரியில்லை ஈ.பி.ஆர்.எல்.எவ் இந்தியக் கைக்கூலிகள் அவர்களும் ஓடிவிட்டார்கள் என்று கூறும் இவர்கள் தமிழ் பேசும் மக்களுக்கு தாம் முன்வைக்கும் தீர்வு என்ன? அதை வெளிப்படையாக மக்களுக்கு சொல்வதற்கு இவர்களுக்கு உரிமையுண்டு. தங்களுக்குள்ளேயே கூடிக்கதைத்து குழுக்களமைத்தாலோ அன்றி விளக்கமில்லாது எழுதுவதாலோ எவ்வித பிரயோசனமும் இல்லை. சதி செய்வதன் மூலம் புரட்சி ஏற்படுத்திவிட முடியுமென நினைக்கிறார்களா? இவர்களைப் போன்றோரைத்தான் கற்பனாவாத சோசலிஸ்டுகள் என்று தோழர் கார்ல் மார்க்ஸ் எங்கெல்ஸ் குறிப்பிட்டார்களோ என்னவோ. களத்தில் மக்கள் உயிர் வாழ்வதற்கு அஞ்சி அஞ்சி நாட்களைக் கடத்துகிறார்கள். அரசின் பொருளாதாரத் தடையால் என்.ரி.ரீ.யின் வரிச்சுமையால் கஷ்டம் குறைந்து போய் விட்டார்கள். இந்நிலைக்கு சரியான தீர்வை முன்வைத்து களத்தில் தம்மை வெளிப்படுத்தி நடைமுறைகளை மேற்கொள்ளவேண்டும். மக்கள் இதிலிருந்து வெளியே வந்து சகஜ வாழ்க்கையை தொடங்க இவர்கள் வழிவகுத்தால் இவர்களின் எதிர்காலத் தீர்வுகளில், மக்களுக்கு இவர்களில் நம்பிக்கை ஏற்படும் வரவேற்பார்கள். இவ்வாறு இது பற்றி இவர்கள் பேசக் கேட்கவில்லை காணோம். இந்நிலையில் இவர்களை வெறும் குழப்பல் வாதிகளாகவே எண்ணவேண்டியுள்ளது.
ஆக இவர்களின் குழப்பங்களில் முற்போக்கு சிந்தனையுள்ள இளைஞர்களும் மக்களும் சிக்கிவிடாது தெளிவாக இருந்து இவர்களை இனங்காண முன்வரவேண்டும்.

# உங்கள் பக்கம் உங்கள் ப

ஆசிரியர் வெகுஜனம். வணக்கம்.

"வெகுஜனம்" பார்த்தோம் "பெண்ணினத்தின் மறுபக்கம்", "பெண் விடுதலைக்கான அணி எது?" மிக தேர்ந்த கட்டுரையாக இருந்தது. சிறுகதை "விசித்திர வியாகரத்து" (அக்கினி) நல்லதொரு கதை. அடங்கியுள்ள கருவும் விளக்கமும் குடும்பப் போராட்டமும் கதையைச் சிறப்பிக்கின்றன. புத்தகப் பூச்சி, பக்குவம் இல்லாதார், போலி மனிதர்கள் வேசம், கதையில் உள்ளடங்கி வெளிக்கொண்டுவரும் உண்மைகள் யதார்த்தத்தைச் சொல்கிறது! சங்கரப்பிள்ளையின் சந்தி அரசியல்" சிந்தனையூர்வமான நகைச்சுவையான நடைமுறைகளோ———— சிரித்தோம்.
மலையக மக்கள் பற்றிய விடயங்களும் நல்லவைகள்.

திரு, திருமதி சொர்ணலிங்கம்.

www.padippakam.com

"வெகுஜனம்" ஆசிரியர் அவர்கட்கு.

ஜனம்-2, குரல்-6 வெகுஜனம் கிடைத்தது மிக மகிழ்ச்சி. "எமது எண்ணங்கள்" மூலம் யார் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கத் தகுதியுடையவர்கள் என்பதை ஆசிரியர் சரியாக கூறியுள்ளார். இன்று வடகிழக்கு பூராகவும் உண்ணாவிரதம் இருந்து இறந்த அன்னை பூபதி அம்மாவுக்கு நினைவு அஞ்சலி என்ற பெயரில் இன்று அரசியல் இலாபம் தேடுபவர்கள் தான் உண்ணாவிரதத்தில் நம்பிக்கை இல்லாதவர்களும் அப்போராட்டங்களை கொச்சைப்படுத்தி நியாயம் கற்பிக்க முயன்றவர்களும். இவர்களால் வஞ்சகத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்ட அமிர்தலிங்கமும், யோகேஸ்வரன் போன்றோர் நல்லூர் வீரகாளி அம்மன் கோவிலின் முன்னால் உண்ணாவிரதம் இருந்தபொழுது அவர்களை கெட்ட வார்த்தைகளால் ஏசியும் கல்லால் எறிந்து குழப்புவதற்கு முயற்சி செய்தவர்களும், யாழ் வளாகத்தில் மாணவர்களின் அகிம்சையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களை கடத்தியவர்களும் இவர்கள் என்பதையும் சேர்த்திருந்தால் "எமது எண்ணங்கள்" பூர்த்தியாய் இருக்கும் என்பது என் எண்ணம். "இருபக்க குறைகள்" சுருக்கமாக எழுதப்பட்டாலும் அவர்கள் எந்த அளவுக்கு முக்கியமானவர்கள் என்றும், அவர்களை சுரண்டிக்கொண்டிருப்பவர்களையும், அதனால் அவர்களுக்கு கல்வி முக்கியம் என்பதையும் அதனிலும் முக்கியமாக பெண் விடுதலைக்கான உரிமைக்குரல் உழைக்கும் மலையக பெண்களிடம் இருந்துதான் வரவேண்டும் என்று சிறப்பாக எழுதியுள்ளீர்கள்! சங்கரப்பிள்ளையின் "சந்தி அரசியல்" நமது நாட்டு நிலைமையை விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. "ஒரு முக்கோணப் பிரச்சனை" இல் நமது நாட்டுப் பிரச்சனையை மிகவும் சிறப்பாக கூறப்பட்டுள்ள போதும் இந்திய இராணுவம் வெளியேறியதற்கு காரணம் தென் இலங்கை தீவிரவாதிகளின் (ஜே.வி.பி) இந்திய எதிர்ப்பு வாதம் மேலோங்கி தீவிரம் அடைந்ததாலும், இந்தியாவின் அரசியல் மாற்றமும் தான் முக்கிய காரணம் என்பதை சுட்டிக்காட்டப்பட்டிருந்தால் இக்கட்டுரை முழுமை பெற்றிருக்கும். சில பத்திரிகைகள் உண்மைக்கு புறம்பானவற்றை எழுதி மக்களின் உண்மையான மனோநிலையை வெளிப்படுத்த விரும்பாத இவ்வேளையில் நமது நாட்டு நிலைமையை இவ்வளவு தெளிவாக கூறியுள்ள "வெகுஜனம்" மேலும் நல்ல ஆக்கங்களை வாசகர்களாகிய எங்களுக்கு தரவேண்டும்.

கே. குமார்.
பொளும்.

## உங்கள் பக்கம் உங்கள் பக்



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கியச் சந்திப்பு

7வது இலக்கியச் சந்திப்பு

நகரில் ஏப்பிரல் 7ம் திகதி நடைபெற்றது. இச் சந்திப்பில் பெண்நிலைவாதம், பெண்கள் பற்றிய வீடியோப் படம், சிறுகதை விமர்சனம் புதுக்கவிதையும், புலம்பெயர்வும், பழைய கலை அம்சங்களுடன் நடந்த கலை நிகழ்ச்சிகளையும் குறிப்பிடலாம். சஞ்சிகை ஆசிரியர்கள் , ஆக்கதாரர்கள், விமர்சகர்கள்; கலைஞர்கள், கல்விமான்கள் எனப்பலரும் பங்குபற்றினர்.

முதற் சந்திப்பிலிருந்து இன்றுவரை பெண்நிலை வாதம் பற்றிய சந்திப்பாளர்களின் மனோநிலையும் விமர்சனங்களும் இதுவரை வேறுபடாத தன்மையிலேயே நகர்ந்துகொண்டு போவதை அவதானிக்க முடிகிறது. பெண்நிலைவாதம் பற்றி சஞ்சிகைகளில் வந்த வெளியீடுகளையும் அச் சஞ்சிகைகளையும் பற்றி கட்டுரைவடிவில் வாசிக்கப்பட்டது. பெயர் குறிப்பிடாத கட்டுரையும் வாசிக்கப்பட்டதாக வாசிப்பாளர் அறிவித்தார். இது வாசிக்கப்படுவதா? என்ற தீர்மானம் இலக்கியச் சந்திப்பின் செயற் குழுவினருடைய தீர்மானம் நாம் அதை விடுவோம். ஆனால் அவ்விடயத்தின்போது அவ்வாறு முன்னுரிமை கொடுத்து எழுதும் சஞ்சிகைகள் சிலவற்றின் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டன. ஆக்கங்கள் எதுவும் ஆராயப்பட்டதாக அக்கட்டுரையில் தெரியவில்லை. ஆய்வு என்பது எப்படி இருக்கவேண்டும் என்பது தெரியாததினாலோ அன்றி கட்டுரையில் குறிப்பிட்ட சஞ்சிகைகள் எல்லாம் கட்டுரையாளரால் வாசிக்கப்படுவதில்லையோ என்பதும் அறியப்பட முடியாமலே இருந்தது. விமர்சனங்களின்போது இன்னுமொரு விடயத்தையும் அவதானிக்க முடிந்தது. ஒருவர் ஒருகருத்தைச் சொல்லவரும்போது அவர் அதைச்சொல்லி முடிக்கும் முன்பே எல்லோரும் தான் முந்தி நீ முந்தியென சொல்பவரைசொல்லவிடாது தாங்களும் சரியானவைகளைச் சொல்லாது குழப்பியடிக்கும் தன்மை. மத்தியதரப் பெண்கள் பெண்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்க முடியாது என்ற ஒரு கருத்தை சந்திப்பாளர் ஒருவர் சொல்லி முடிக்குமுன் பெண்கள், ஆண்கள் எல்லாருமே அவரை மேற்சொல்ல விடவில்லை. உண்மையில் எல்லா மத்தியதரவர்க்கப் பெண்களையும், ஆண்களையும் இது பாதிக்கத்தான் இருக்கும். காரணம் வருகைதந்த எல்லாருமே மத்தியதர வர்க்கத்தினர்தான். இது ஜதார்த்தம் இந்த நடைமுறைப் பிரச்ச



படிப்பகம்

www.padippakam.com

னைதான் தலைமை பற்றிய சர்ச்சையையும் உண்டாக்குகிறது. போராட்டம் இல்லாது இருக்கும்போது எது தலைமை?

இதற்கு உதாரணமாக திருமதி தேவிகா கங்காதரன் உழைக்கும் கீழ்மட்டப் பெண்களின் நடைமுறை நிகழ்வைச் சொன்னார். மத்தியதர வர்க்கப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் உழைக்கும் வர்க்கப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் வேறுபடுத்திப் பார்க்கமுடியாது அவர்கள் தங்களை ஒன்றுபடுத்திக்கொண்டாலன்றி அவர்களுக்காக போராடமுடியாது, என்பதை இன்னும் அவர்கள் உணர்வதாகத் தெரியவில்லை.

ஐரோப்பியர் ஒருவரால் தொகுத்துக் காண்பிக்கப்பட்ட ஒரு வீடியோ படநிகழ்ச்சி இடம்பெற்றது. இப்படியான வரலாற்று ரீதியான ஒடுக்குமுறைகள் படமாக்கப்பட்டிருந்தால்தான் அதை செயற்குழுவினர் படமாக காண்பிக்க முடிந்ததென்பது மறுக்கப்பட முடியாத உண்மை. அத்துடன் இது படமாக்கப்பட்ட நோக்கங்கள் வேறாக இருந்தாலும் முதலாளித்துவ வர்க்க சிந்தனைகள் இடம் பெற்றிருப்பினும் நிகழ்வுகளை எல்லோரும் காணக்கூடிய வாய்ப்புக்களை செயற்குழுவினர் எல்லோருக்கும் ஏற்படுத்தியமை பயன் உள்ளதே. இந்நிகழ்வுக்கு சமூக பொருளாதார அரசியல் காரணங்கள் மட்டும் காரணம் அல்ல, போராட்டக்குணாம்சம் அற்ற தன்மையே முக்கிய காரணம் என்ற உண்மையை யாரும் மூடி மழுப்பிட முடியாது.

செல்வி உமாவும், திரு சுகனும் சிறுகதைகளை விமர்சனம் செய்தார்கள். சுகனின் விமர்சனம் அவர் படிக்கும் தூண்டிலில் மட்டும் பொறுக்கி எடுத்து விமர்சிக்கப்பட்டது. எல்லா சஞ்சிகைகளிலிருந்தும் ஒவ்வொரு கதைகளை எடுத்து கதாசிரியரின் பார்வையையும் தனது கண்ணோட்டத்தையும் சமூகத்தின் தேவையையும் ஒப்புநோக்கி ஆய்வை மேற்கொண்டிருப்பின் நன்மை பயப்பதாய் இருந்திருக்கும். செல்வி உமா சுகனை மேல்நோக்கிப் போயிருந்தாலும் பிரச்சாரம் செய்யப்படுவது தவிர்க்கமுடியாதது என்ற கருத்தை தெரிவித்திருந்தால் யதார்த்தம் இருந்திருக்கும். இலக்கியங்களின் நோக்கமும் தேவையும் பிரச்சாரங்களை உள்ளடக்கியதுதான் என்பதை மறுக்கமுடியாது. என்பது விமர்சகர்களால் முன்கொண்டு வரப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

புதுக்கவிதையும் புலம்பெயர்வும் நிகழ்ச்சி பற்றி திரு குமரன் ஒரு சொற்பொழிவையே செய்துவிட்டார். அவர் புதுக்கவிதையின் வளர்ச்சி காலத்தின் தேவை என்பதையும் வளர்ந்த முறைகளையும் விபரித்தார். ஆனால் புலம்பெயர்வு என்ற விடயத்தில் ஜெர்மனியில் வெளிவரும் கவிதைகளைப் பெரும்பாலும் புறக்கணிப்புச் செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இலக்கியச் சந்திப்பு நிகழ்ச்சியே சஞ்சிகை ஆசிரியர்கள், ஆக்கதாரர்கள், விமர்சகர்

www.padippakam.com

களால் உருவாக்கப்பட்டதாக இருக்கும்போது இச் சஞ்சிகைகளுக்கு எழுதும் கவிஞர்களின் கவிதைகளை அவர் மனங்கொள்ளாததின் நோக்கை என்னால் உணரமுடியவில்லை.

பழைய கலை அம்சங்களுடனான குதித்து ஆடிப்பாடும் நாட்டுக்கூத்துப்பாணியில் சாதி முறையால் தாழ்த்திவைத்த பக்த நந்தனை புரட்சிக்காரனாக்கிய சிந்தனையாளர் சாதியின் வர்க்கக்குணாம்சங்களையும் வரலாற்று நிகழ்வுகளையும் தொட்டு மாவிட்டபுரம், வடமராட்சி, சிறுப்பிட்டி எழுச்சி போன்றவைகளை கூறித்தொட்டிய கலை நிகழ்ச்சியின் ஓட்டம் எல்லோரையும் கவரக்கூடியதாக இருக்கையில் அவ்விரண்டு இவைகளுக்குப் புறம்பான நாடகப்பாணியில் கொண்டு யாழ்ப்பாண சங்கிலி மன்னனைப் புகுத்தி வந்த நந்தனின் புரட்சியை முறியடித்த சமூகக் குணாம்சத்தன்மையை கலை நிகழ்ச்சியிலும் புகுத்தியது குளிக்கப்போய் சேறு பூசியது போலவே அமைந்தது. அடுத்த சந்திப்பினை எசன் நகரத்தில் நடத்துவதற்கான செயற்குழுவையும் தெரிவு செய்தனர்.


## அன்பான வாசகர்களே!

தங்கள் ஆக்கங்களையும் விமர்சனங்களையும்
வெகுஜனம் பெரிதும் வரவேற்கிறது. ஆக்கங்களை
செழுமையாக்கவும் திருத்தவும் ஆசிரியர் குழுவுக்கு
உரிமையுண்டு என்பதைத் தோழமையுடன்
தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சந்தாவிபரம்

6 மாதங்களுக்கு..........10,00 DM
1 வருடத்திற்கு...........20,00 DM
மேற்கு ஜேர்மனி தவிர்ந்த மற்றைய நாடுகளுக்கு
தபாற்செலவு தனி.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
VEKUJANAM
Mittwegstr. 21
4300 ESSEN 1
WEST GERMANY




படிப்பகம்

www.padippakam.com

# எமது இரண்டு ஆண்டுகள்

"வெகுஜனம்" தொடர்ந்து இரண்டாண்டுகள் வெளிவந்துவிட்டது என்பதையிட்டு பெருமிதமடைகிறோம். ஒரு சமூக, அரசியல் சஞ்சிகை தொடர்ச்சியாக வெளிவருவதில் எத்தனை கஷ்டங்கள் உண்டு என்பதை நாம் அனுபவரீதியாக உணர்ந்துள்ளோம். இருப்பினும் எப்படி எம்மால் தொடர்ந்து வெளியிட முடிகிறதென்றால், எமது எழுத்துக்களை வரவேற்று எமக்கு ஊக்கமளிக்கும் வாசகர்களும், ஆக்கங்களை எழுதி எமக்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் ஆக்கதாரர்களும், உறுதியான நிலைப்பாட்டுடன் இயங்கிவரும் நமது எழுத்தாளர்களும்தான் என நாம் நினைக்கிறோம். எமக்கு பின்னால் எந்த நிறுவனமும் இல்லை, அதனால் பொருளாதார நெருக்கடிகளை பலமுறை சந்தித்திருக்கிறோம். இதன் விளைவு கையெழுத்துப் பிரதி சஞ்சிகையாக வெளிக்கொணர்ந்து வாசகர்களுக்கு பலத்த கஷ்டங்களை கொடுத்திருக்கிறோம். இதை எமது குறைபாடாகவே கருதுகிறோம். இப்போது தட்டச்சு மூலம் வெளிக்கொணர்ந்தாலும் எழுத்துப் பிழைகள் தொடர்வதை பல வாசகர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். விரைவில் செம்மைப்படுத்துவோம் என உறுதி கூறுகிறோம்.

இன ஒடுக்கல்களும், ஒடுக்குமுறைகளும், காண்டம் கொண்ட உலகை எதிர்த்து என்றும் எழுதுவது என்பதும் நமது கொள்கையில் உறுதியாகவே இருந்து வருகிறோம். களத்தில் இதன் ஒத்தகருத்துள்ளவர்களை நாம் பகிரங்கமாக ஆதரிக்கிறோம். இதனால் நாம் எவ்வளவு அர்த்தமற்ற பழிச் சொற்களை வாங்கிக் கொண்டோமாயினும் கொண்ட கொள்கையின் தெளிவு காரணமாக உறுதி குலையவில்லை; எமது கருத்துக் கொள்கையுடன் ஒத்துப்போபவர்களுடன் ஐக்கியமாக கைகுலுக்க எமது கரங்கள் என்றும் தயாராக உள்ளன. ஆனால் நேற்று எழுதியதை இன்று மறுதலிப்பவர்களுடனும், மற்றவர்களை குற்றம் சாட்டி தம்மை விளம்பரப்படுத்துபவர்களுடனும், "இலக்கிய சந்திப்பில்" நாம் சொல்லும் கருத்துக்களை [illegible] ஒதுக்கிவிட்டு, பின் நமது பத்திரிகையின் பெயரையே எழுதாது நிராகரித்துவிட்டு ஐக்கியத்தைத் தேடுபவர்களையும், ஈழத்தில் குழுவாதம் தலைதூக்கி எல்லாவற்றையும் அழித்துவிட்டது என்று சொல்லிக்கொண்டு இங்கு குழுவாக இயங்கிக்கொண்டு காழ்ப்புணர்ச்சியுடன் நேர்மையற்ற எழுத்துக்களை எழுதும் முற்போக்குவாதிகள் என தம்மை தம்பட்டமடித்துக்கொள்ளும் நபர்களுடன் நாம் கை குலுக்கத் தயாராக இல்லை. எமது சஞ்சிகையின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ள அனைவருக்கும் எமது தோழமையான நன்றிகள்.

www.padippakam.com

# உலகக் கண்ணாடி

## மண்டேலா சுற்றுப்பயணம்.



தென் ஆபிரிக்க கறுப்பின மக்களின் நம்பிக்கை நட்சத்திரமான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா வெளிநாட்டு சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். மே மாதம் தென்னாபிரிக்க ஜனாதிபதி கிளார்க் ஐரோப்பாவுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். இவரின் விஜயங்களுக்கு பதிலடி கொடுக்கும் முகமாகவே நெல்சன் மண்டேலா விஜயத்தை மேற்கொண்டுள்ளார் என அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன. இன ஒதுக்கல் நடவடிக்கைகளை கிளார்க் மேற்கொள்ளாது நிறுத்தும் வரை பொருளாதாரத் தடைகளை தொடர்ந்து பேணுமாறு தாம் மேற்குலக நாடுகளிடம் வேண்டுகோள் ஒன்றை விடுக்கப்போவதாய் சுற்றுப் பயணத்தின் முன்பு பத்திரிகையாளரிடம் பேசிய மண்டேலா தெரிவித்தார்.

## பஞ்சாப் மாநில ஆளுனர் இராஜினாமா.

இந்திய பஞ்சாப் மாநில கவர்னர் நிர்மல் முகர்ஜி தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். பஞ்சாப் மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியினைத் தொடர்வது உசிதமல்ல எனவும் மாநில சட்ட சபை தேர்தலை நடாத்தவே சிறந்ததெனவும் மத்திய அரசுக்கு முகர்ஜி எடுத்துக் கூறியுள்ளார். முகர்ஜியின் அணுகுமுறையை பாரதீய ஜனதா விரும்பவில்லை. மத்திய அரசு பாரதீய ஜனதாவை தட்டிக் கழிக்க முடியாத நெருக்கடியில் உள்ளதால் முகர்ஜியின் அறிவுறுத்தலை மத்திய அரசு நிராகரித்ததைத் தொடர்ந்து நிர்மல் முகர்ஜி இராஜினாமாச் செய்துள்ளார். இதேவேளை காஷ்மீர் மாநில ஆளுனர் ஜக்மோகன் மே மாதம் இராஜினாமாச் செய்துள்ளார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சீனாவின் மாணவரின் ஜனநாயக போராட்டத்தின் ஓராண்டு நினைவு.

கடந்த வருடம் சீனாவில் தியனான்மென் சதுக்கத்தில் மேற்கொள்ளப்

www.padippakam.com

பட்ட அடக்கு முறையை நினைவு கூரு முகமாக பீக்கிங் பல்கலைக் கழக மாணவர்கள் எவரினது தூண்டுதலுமின்றி சுயமாகவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சீன ஆட்சியாளர்களின் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் மிகவும் அமைதியாக வளாக முற்றத்தில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். மாணவர் தலைமையிலான ஜனநாயக ஆதரவு இயக்கம் பாரிய அளவில் ஆர்ப்பாட்டங்களை ஊர்வலங்களை நடாத்தக்கூடும் என அஞ்சிய சீன அரசு சுதந்திர நாட்களுக்கு முன்பே தியனென்மென் சதுக்கத்தை மக்கள் பாவனைக்கு தடை செய்திருந்தது. இத்தடைகளை மீறி 3.6.90அன்று இரவு நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். இம் மாணவர்கள் மத்தியில் லீ ஸிசி என்னும் மாணவன் உரை நிகழ்த்தினான். மாணவர்களை விரட்டியும் லீ ஸிசி என்ற மாணவனை கைது செய்தும் பொலிசார் முனைந்தபோது மாணவர்கள் கூச்சலிட்டோடு ஆர்ப்பாட்டம் செய்ததில் பொலிசார் விலகிச் சென்றனர். அத்துடன் இச்சம்பவம் குறித்து தகவல் சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

## ரிச்சார்ட் டி சொய்சாவுக்கு சாதனை விருது.

சிறிலங்காவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை வெளி உலகிற்கு வெளிக்கொணர முனைந்த இன்டர் பிரஸ் நிறுவன ஊழியர் ரிச்சார்ட் டி சொய்சா இலங்கை அரசின் பின்னணியுடன் படுகொலை செய்யப்பட்டது அறிந்ததே. 1990ம் ஆண்டிற்கான சாதனை விருது ரிச்சார்ட் டி சொய்சாவுக்கு வழங்குவதென இன்டர்பிரஸ் சேவை, இன்டர் பிரஸ் நிறுவனம் ஆகியன முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்டர் பிரஸ் நிறுவன டைரக்டர் பீட்டர் கலினர் இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில் மூன்றாம் உலக நாடுகளில் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்துவதை அங்கீகரிக்கும் வகையில் ரிச்சார்ட் டி சொய்சாவுக்கு இவ் விருது வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளார். நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமைக் காரியாலயத்தில் செப்டம்பர் 18ம் திகதி இவ் விருது வழங்கப்பட்டுள்ளது. ரிச்சார்ட் டி சொய்சா கடத்தப்பட்டு கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதை



விசாரணைக்குட்படுத்த பரிசீலிக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் நிலையத்தை ஐ.நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் கோரியிருப்பதாக தெரிய வருகிறது. இது


படிப்பகம்

www.padippakam.com

தொடர்பாக பொறிஷ் குய்லர் ஜ.நா. மனித உரிமை நிலையத்திற்கு எழுதிய கடிதமொன்றின் பிரதி மறைந்த ரிச்சாட் டி சொய்சாவின் தாயார் திருமதி மனோராணி சரவணமுத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது.

முதலாளித்துவ சுரண்டல் கூட்டங்களுக்கு நாட்டின் கதவுகளை திறந்து விட்டதின் பலனாகவும் உள்ளூர் தரகு முதலாளித்துவத்தின் நாட்டை திட்டமிட்ட வகையில் அபிவிருத்தி செய்யமுடியாதபோன வக்கற்ற தன்மையாலும் தன்னிச்சையாக அரச எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டவர்களும், ஜே.வி.பி போன்ற இலக்கற்ற ஸ்தாபனங்களாக தம்மை இணைத்துக்கொண்டு போராடியமைக்காக கடந்த வருடம் அரசபடைகளால் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தெருவோரத்திலும் களனிகளிலும், ஆறுகளிலும் அனாதைப்பிணங்களாக வீசிஎறியப்பட்டவர்கள் போக கொடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஆனால் அண்மையில் அரசு வெளியிட்டுள்ள தகவல்களின்படி தடுப்பு முகாம்களில் 6ஆயிரத்து 757 இளைஞர்களே உள்ளதாகவும், புனர்வாழ்வு முகாம்களில் 2ஆயிரத்து544 இளைஞர்களுமாக மொத்தம் 9 ஆயிரத்து 301பேர் அரசின் பாதுகாப்பில் இருப்பதாக தெரிவிக்கின்றது. மீதி இளைஞர்களின் நிலையைப் பற்றி அரசுக்குத்தான் வெளிச்சம்?.

அரசின் தகவல்களின்படி தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளோர் விபரம் வருமாறு. பூசா−2,226, வெலிசறை−50, பல்லேகெல−591, பூனானை−1,055, பெலவத்தை−1,184, விசேட அதிரடிப்படை−1,270, சிறைச்சாலை−391, பல்கலைக்கழகம்−33, ஏனைய இடங்களில்−17 மொத்தம்−6,757.

புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைத்திருப்போர் விபரம் வருமாறு. கெனுழ்ர−178, கலப்ப[illegible]−218, ரத்மலானை−288, குளியாப்பிட்டி−300 பொல்கொல்ல−291, விசேட அதிரடிப்படை−137, அம்பாறை−379 குருணாகல−77, மதனை−130, ரத்னாவலி ஞாத்ரீகா விடுதி−211 மொத்தம்−2544. அரச படைகளின் காவலில் உள்ளவர்களில் 5000த்திற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு அரசு ஆயுள் தண்டனை கொடுக்க திட்டமிட்டிருப்பதாக எதிர்க் கட்சிகளின் தரப்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஐக்கியப்படுவோம்

# போராடுவோம்

# அமைதி காண்போம்

படிப்பகம்